போஸ்டு ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௩. } விரோதகிருது ௵ மாசி ௴ { பகுதி ௧௧.

பொருளடக்கம்.


| | |
|---|---|
| திருவாவடுதுறை ஆதினமும் தமிழும்—பத்திராதிபர். | ௩௩௫ |
| ஜாதி வேற்றுமை—திலலைவாணன். | ௩௩௮ |
| மாலினீ மாதவம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A., B. L. | ௩௪௨ |
| சிவனடியார் பெருமை—T. S. தியாகராஜ ஞானியார். | ௩௪௮ |
| முத்ராராக்ஷஸம்—R. வேதநாராயண சர்மா B. A., B. L. | ௩௫௦ |
| ஸர் ஐஸாக் நியூடன்—S. நாராயணன் B. A., L. T. | ௩௫௫ |
| சரீரசுகம்—செ. அரு. சித. இராமநாதன்செட்டியார். | ௩௫௯ |
| தமிழகச்செய்தி—பத்திராதிபர். | ௩௬௦ |
| ஸ்ரீமத். வே. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் மீது இரங்கற்பாக்கள். } ம. கோபாலகிருஷ்ணையர் | ௩௬௪ |
| சமாசாரக்கொத்து—பத்திராதிபர். | |



மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

மாணக்கர்கட்கு ௵ சந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

# இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது

## ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

## ரவிக்கை குட்டைகளும், புட்டவைகளும்.

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகர்

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் இவைப்படைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால் வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளை அனுப்பப்படுமென்பது திண்ணம்.

| | |
|---|---|
| 42 இஞ்சு அகலம் 8 கஜம் நீளம் | புடவை 1க்கு விலை ரூ. 25 முதல் ரூ. 50 வரை. |
| 42 இஞ்சு அகலம் 20 இஞ்சு நீளம் | ரவிக்கை 1-க்கு விலை ரூ. 2—8—0 முதல் ரூ. 5 வரை |

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம் எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகர், ஸ்ரீகாசி. Benares City.

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩. } விரோதிகிருது வருட மாசிமீ { பகுதி ௧௧.

## திருவாவடுதுறை ஆதீனமும் தமிழும்.

சைவ சமயாசாரிய பீடமாகி விளங்கும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் தொன்றுதொட்டுத் தமிழ்ப் பரிபாலனத் தலைவராகி நின்றவர்களென்பது உலகறிந்த விஷயமே. தமிழ்நாட்டிற் பல சைவாதீனங்க ளிருப்பினும் அவற்றுளெல்லாம் தமிழ்ப் பரிபாலனவுரிமை திருவாவடுதுறை ஆதீனத்தாருக்கே பெரிதும் இருந்திருக்கிறது. இவ்வாதீனத்தில் எழுந்தருளுங் குருமூர்த்திகள் வடமொழி தென்மொழி வல்லுநர்களாக விளங்கியதுடன் எக்காலத்தும் சிறந்த வித்துவான்களை யருகில் வைத்துப் பல நூல்களையும் உரைகளையும் செய்வித்தும், பற்பல மாணாக்கர்கட்கு உண்டியும் உடையும் உறையுளு முதவிக் கற்பித்தும் பாஷையையும் மதத்தையும் பரிபாலித்து வந்துள்ளார்கள்.

இற்றைக்கு 126 வருஷங்கட்குமுன் சிவஞானபோத திராவிட மாபாடிய கர்த்தராகி இருபெருமொழிக்கும் ஒரு பெருந்தலைமை பூண்டு விளங்கிய ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் இவ்வாதீனத் திருக்கூட்டத்தாருள் ஒருவரே; இந்த மஹாநுபாவ மூர்த்திகள் நூல்களும் உரைகளும் எல்லா நலமும் வாய்ந்து இக்காலத்தும யாவராலும் நன்கு மதிக்கப் பெற்று விளங்குகின்றன. இச்சுவாமிக ளிடம் கல்வி கற்றுத்தேறினோர் பன்னிருவர். அவருட்டலைமை வாய்ந்த கவிச்சக்கரவர்த்தியே ஸ்ரீகச்சியப்பமுனிவர். இம் முனிவர்

பிரான்கல்வித் திறமை அளவிடுந் தரத்த தன்று. இம்முனிவர் பெருமான்றிய பன்னிருவர்பாலும் கல்விகற்றவர்கள் திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர் முதலிய பலராவர். இங்ஙனம் வழிவழியே கற்றுவந்தவர்கள் தாம் தற்காலம் சிறந்த பண்டிதர்களாகி "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக." என்றவாறு அறிவு ஆற்றல் அடக்கம் ஆகிய உயர்குணங்களுடன் உலகத்தாராலும், அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பெற்று விளங்குகின்றார்கள் இங்ஙனம் திருவாவடுதுறை ஆதீனத்தையடுத்துப் பல்லாண்டு வசித்து வரன்முறையாக இலக்கிய இலக்கணங்களைக் கற்றுச சித்தாந்த சாஸ்திரம் பயின்று தேர்ச்சியுற்ற வித்வத் பரம்பரையார் தாம் தற்போதும் உலகில் சில விடங்களிலிருக்கும சிறந்த வித்துவான்களாவர். பண்டும், இன்றும திருவாவடுதுறை ஆதினத்திற் கல்விகற்றவர் என்றால், அதற்கே பெருங்கௌரவமுண்டு. மஹா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில கல்விகற்றுத்தேறிய வித்துவசிகாமணியே என்பதும், அவர்கள்பால் கல்விகற்றுத்தேறிய வித்வ ரத்னமே ஸ்ரீ மகாமகோபாத்தியாய, வே. சாமிநாதையரவர்களென்பதும் யாவரேயறியார்? இப்போதுள்ள குரு மூர்த்திகட்கு முன்னிருந்த மஹாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள், இரண்டாவது பட்டத்தி லெழுந்தருளியிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிக சுவாமிகள இவர்கள் கல்வித் திறமையையும், இவர்கள்பாற் கல்விகற்று மாணாக்கராகும் பேற்றுக்குரியராகிப் புலமையிற்சிறந்து விளங்கும் வித்துவான்களின் பெருமையையும், இவர்கள் காலத்துத் தமிழ் வளர்ந்த நிலைமையையும் நம்மவர்கள் மறந்திருக்கமாட்டார்களன்றோ?

தற்போது இவ்வாதீனத்தில் மஹாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் பெருங்கொடை வள்ளலும் கல்வியின் நிலையுமாகிய ஸ்ரீமத்-அம்பலவாண தேசிகசுவாமிகள் பட்டத்தில் எழுந்தருளிய பின்னரும், சில வருஷகாலம் இவ்வாதீனத்தில் தமிழ்ப் பரிபாலனம் வழக்கப்படி சிறப்பாகவே நடைபெற்றுவந்தது. இங்ஙனம்வருங்கால், தமிழ் நாட்டார் தவக் குறைவால் இடையே சில காலம் தமிழ்ப் பரிபாலனம் செவ்வையாக நடைபெற்றிலது. அச்சமயம் மதுரையில

நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றி ஒருவாறு தமிழ்ப் பரிபாலனஞ் செய்ய முற்பட்டது. அச் சங்க ஸ்தாபகரும் அக்கிராசனாதிபதியு மாகிய ஸ்ரீமாந்- பாண்டித்துரைத் தேவரவர்கள் சென்ற கார்த்திகைமீ இவ்வுலகவாழ்வை நீத்தனர். அந்தோ! இவர் பிரிவு நமது தமிழ்நாட் டுக்குப் பெரிதும் நஷ்டமே. இத்தேவரவர்கள் கற்றகல்வியும், தமிழ்ச் சங்கத்தில் கற்பித்தகல்வியும் திருவாவடுதுறை ஆதீனத்துக் கல்வியே யாகும்.

இவ்வாறாக இப்போது ஞானக்கோமுத்தி ஆதீனத்து ஞான தேசிக மூர்த்தியாகிய ஸ்ரீமத்-அம்பலவாணதேசிக சுவாமிகள் தமது ஆதீனத்தில் பழைய வழக்கப்படியே எத்தனை மாணாக்கர்கள் வந்தாலும் அத்தனை பேருக்கும் உண்டியும் உடையும் உறையுளும் உதவிக் கல்வி கற்பிப்பதாக முன் வந்துள்ளார்கள். தமது ஆதீன வித்துவானும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும் ஆகிய ஸ்ரீ: மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களையே பழைய படி தமது ஆதீன வித்துவானாக அழைத்து வைத்து மாணாக்கர்கட் குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தருளியிருக்கின்றார்கள். தற்போது தம்பிரான்களும் பிறருமாக 12 பேர்கள் பெரிய புராணம் முதலிய நூல்களைக் கற்கின்றார்கள். இன்னும் மாணாக்கர்கள் தொகை அதிகப் படுமாயின் வேண்டுமளவு தமிழ்ப்போதகர்களையும் அமைப்பதாக வும் திருவுளம்பற்றி யிருக்கிறார்கள். தமிழ்க் கல்வியை முறை யாகக் கற்கவிரும்புவார்க்கு இனிமேல் யாதொரு குறையுமில்லை. தமி ழும் சைவமும் தழைப்பெய்தும். கருணையங்கடலாகிய மஹாசந்நி தானம் இங்ஙனம் தமிழ் வளர்க்க முன் வந்தது தமிழ்த் தேசவாசி கள் தவப்பயனே. இதுபற்றி நமது குருமூர்த்திகளை மனதாரச் சிந்தித்து வாயார வாழ்த்துகின்றோம்.

இன்னுமொரு விஷயம் திருவுளம் பற்றும்படி திருவருட் கட லாகிய மஹாசந்நிதானத்தின் திருச்செவிக்கு விண்ணப்பிக்கின் றோம். அதாவது—சில உபந்யாசகர்களை நியமித்துப் பற்பல ஊர் களிற் சென்று கல்வி அறிவு ஒழுக்கம் சமயவுணர்ச்சி முதலியவற் றைப் பிரசங்கிக்கவும், ஆங்காங்குத திருநாட்காலங்களில் சமயசம் பந்தமான துண்டுப்பத்திரங்களை ஆயிரக் கணக்காக அச்சிட்டுப் பரப் பவும் ஏற்பாடு செய்தருள வேண்டுமென்பதே. புறச் சமயத்தவர்

களும் வரன்முறை யறியாது வரம்புமீறிச் சுயநயங்கருதி மனங் கொண்டவாறு பேசும் போலிப் பிரசங்கிகளும் மலிந்து வரும் இக் காலத்து ஆதீனத்தார்கள் முன் வந்து உண்மையுணருமாறு செய் தாற்றான் நம்மவர் நலம் பெறுவர்.

இங்ஙனம் சைவசமயப் பிரசங்கங்களும் துண்டுப் பத்திரங்க ளும் பரவும்படி செய்யும் விஷயத்தில் எல்லா ஆதீனகர்த்தர்களு மே முற்படவேண்டும். ஒவ்வொரு ஆதீனத்தாரையுமே பிரார்த்திக் கின்றனம். சமயப்பற்று உலகத்தில் விருத்தியானுற்றான் ஆதீனத் தார்களிடம் ஜனங்கள் அன்பு பாராட்டுவார்கள். தற்காலமோ சிவ சாதனம் பூண்ட சில பிரசங்கிகள் தீக்ஷை பெற வேண்டுமென்பது அவசியமில்லை யென்று பிரசங்கிக்கின்றார்கள். இதுவுங் கலியின் கொடுமையே. இந்தச் சமயத்திற்றான் சைவசமயத்தின் உண் மைகளை விளக்கத்தக்க பிரசங்கிகளும் துண்டுப் பத்திரங்களும் வெளிப்படச் செய்யவேண்டும். இங்ஙனம் செய்தருளுவார்களா னால் போலிப் பிரசங்கிகளால் நேரும் மயக்கந் தொலையும். சைவந் தழைக்கும்.

அம்பல வான அருட்குரவர் சீர்வாழ்க
இம்பர்தமிழ் வாழ்க இனிது.

பத்திராதிபர்.

## ஜாதி வேற்றுமை.

—[:*:]—

நமது தேசத்தில் ஜாதி வித்தியாசம் மிகப்பெரிதாகப் பாராட் டப்பட்டு வருவதை யாவருமறிவர். இவ்வழக்கம் நவீனமாகவந் ததா? பண்டேயுள்ளதா? என ஆராயப்புகின், வேதம் ஆகமம் புரா ணம் இதிகாசம் இவைகள் எப்போது தோன்றினவோ அப்போதே இந்த ஜாதிவித்தியாசமும் வந்ததெனக்காணப்படுகிறது. வேத முதலிய நூல்களிலே குலத்தின் உயர்வுதாழ்வுகளைப்பற்றிக் கூறியிரு த்தலாமலன்க. இங்ஙனம் நமது தேசமானது தொன்றுதொட்டே ஜாதிவித்தியாச வரம்பிற்குட்பட்டு நடந்துவருவதாயினும், சில கால மாக இவ்வித்தியாசத்தை யொழிக்கவேண்டுமெனச் சிலர் முயல்கின்

றனர். இங்ஙனம் முயல்கின்றவர்கள் இருதிறப்படுவர். ஒருவர் ஆசாரச் சீர்திருத்தக் கக்ஷியினர்; இவர் "நமது தேசமானது கல்வி செல்வம் முதலியவற்றால் உயர்வடைய வேண்டுமாயின், நாம் ஜாதி வித்தியாசத்தையொழிக்கவேண்டும். இதையொழித்தாற்றான் நமக்குட் சகோதர பாவமாகிய ஒற்றுமைவளரும். மற்றும் பல சௌகரியங் களும் பெருகும். பெருகவே எல்லாவகையாலும் நம் தேசம் மேன் மைபெறும். ஆனதால பார்ப்பார்முதல், பறையர்வரை யாவரும் சம போஜனஞ்செய்து ஐக்கியமாக இருக்கவேண்டும்." எனக்கூறு கின்றனர்.

இவ்வாறு கூறுவார்களைப் பற்றி நாம் யாதோர் அபிப்பிராய மும் இங்கே கூறவரவில்லை. மற்றொரு வகுப்பார்களோ வேதமுத லிய நூல்களையே பிரமாணமாகக்கொண்டு சைவசமயப் பற்றுடையர் போலச் சிவவேடந் தாங்கிநிற்கும் வைதிகசைவக கோட்பாட்டினர். இன்னவர் கூறுவதாவது, "நமக்குள் ஜாதிவித்தியாசம் மிகவும் விரிந் துளது. பிராமணர்களைவிட்டு ஏனைய குலத்தார்களில் மாம்ஸபோ ஜனமில்லாமல் சுத்தபோஜனம செய்பவரெல்லாருமொரு வகுப்பாக சமபோஜனஞ் செய்யவேண்டும் என்கின்றனர். இங்ஙனம் இவர்கள் கூறுவதற்குப் பொருத்தமாகத் தமிழ்வேத முதலிய நூல்களிலே "புலையனுயினும விபூதிருத்திராக்ஷதாரணஞ் செய்துவந்தால் அவரு டன் உறைக, அவருடன் உண்க"எனக்கூறியிருக்குஞ் சில செய்யுட் களை உதாரணமாகக் காட்டுதலுடன் சேரமான்பெருமாள் நாயனார் வண்ணானை வணங்கவில்லையா என்றுங்கேட்கின்றனர். இவர்கூறும் விஷயங்களைப்பற்றியே யாம்இங்கு விவகரிக்கத் தொடங்கினமென்க.

சைவசமயத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் இச்சமயநிலையை விரித்துரைக்கும நூல்களால் விதிக்கப்பட்ட முறைக்குக் கட்டுப் பட்டே யொழுகவேண்டும். சமயாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தமிழ்வேதங்களிலே "இழியாக்குலத்திற்பிறந்தோம்" "உயர்ந்தேன் மனைவாழ்க்கையுமொண்பொருளும்" எனக்குலத்திலு யர்வை உடன்பாட்டு முகத்தானுங், "குலமும்பாலேன்" எனஎதிர் மறைமுகத்தானும விளக்கியிருக்கின்றனர்.

விதிநூல்களிலோ குலத்தின்ஏற்றத்தாழ்வுகளைப்பற்றிப் பலபடக் கோஷிக்கக் காண்கின்றோம். அவற்றைவிரிக்கிற்பெருகும். பொதுமறை

யுடையாரும்“நலத்தின்கணுரின்மை தோன்றி னவனைக்,குலத்தின்க ணையப் படும்” “குலனுடையார் கண்ணேயுள” “குடிப்பிறந்தாரகண்ணேயுள”, எனப் பலமுறை குலத்தின் உயர்வை விளக்கியுள்ளார். அன்றியும திருநாளைப்போவார் இழிய குலத்தினராய்த்தோன்றினமைபற்றி அவரை அக்கினிப்பிரவேசஞ்செய்வித்துப்பினனரே சிதம்பரதரிசனம செய்வித்தனர் என்பதும், இது சிவபெருமான் கட்டளையே யென்பதும் பெரியபுராணத்தால் நன்குதெளியக் கிடக்கின்றன.

இவ்வாறு பண்டைநூல்கள் முறையிட்டுநிற்கவும் இம்முறையைக்கடந்து தத்தம் மனம்போனபடி உபதேசிககபபுகுதல அறிஞரவைக்களத்து நிலை நிறகுமா?

“வேளாளர், முதலியார், கார்காத்தார், ஒதுவார், குருக்கள் என்னுமிவர்களெல்லாம பரம்பரைசசைவர்களாதலின் சமபோஜனத்துக்குரியராகின்றனர். வேளாளர் கார்காத்தார் இருவரும் பிள்ளையென்ற பட்டப்பெயர் உடையர். தற்காலதது யர்தவர் அகம்படியர் தநதைபறியாக குலத்தவா மற்றும் சிலதாழ்ந்த வகுப்பினர் இன்னவரெல்லாம் பிள்ளையெனப் பட்டப்பெயா வகிக்கின்றனர். இவருட்சிலர் சுழ்மே இலக்கிய இலககணஙகளைக்கற்று சாஸ்திரமுமபடிததுப் பிரசஙகிகளாகி விபூதி ருததிராக்ஷதாரிகளாகவும் சிலர் காவித்துணியைச் சுற்றியுடுத்து முக்காடிடுபவராகியும் வெளிகிளம்புகின்றனர். இவாகள கல்வி நலததைககண்டு உலகத்தார் சற்று அருமைப்படுத்தவே இவர்கட்கு இறுமாப்புத்தலைக்கேறுகின்றது. உடனே தாமும் மேற்கூறிய பரமபரைச் சைவாகளுடனிருந்து சமபோஜனம் செய்ய ஆசைகொண்டு சில விடங்களில தாமும பரம்பரைச் சைவரென்று பொய்கூறித் திருட்டுத்தனமாகச் சமபோஜனம் செய்கின்றனர். பின்னா அதுவெளியாகவே முன்னர் சமபோஜனம் செய்த இடத்திற்றானே மற்றொருமுறை பெரிதும் அவமானப்பட்டு வேறிருந்துண்டு பெரிதுகதுக்க முறுகின்றனர். இங்ஙனம் பரிபவப்பட்டபின் “சிவசாதனம்பெறில் எகுலத்தவராயினும் சமபோஜனம் செய்யலாம்”என வாய்கூசாது உபதேசிக்க வந்து முற்படுகின்றாகள். இப்படியுண்ணுவதுதான் ஞானநிலையும் சமரசபாவனையும் என்கின்றார்கள். “பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே” என்றவாறு இவர்களது பேச்சுநயத்தால் சிலர், இவர் கருததுக்கிணங்கி இதுதான் நியாயமெனமயங்கிக்

கொள்கின்றார். ஞானநிலைக்கு எல்லாருடனும் உண்பதுதான் அங்கமென்பது சிறிதும் பொருந்தாது. குலவரம்புக்குட்பட்டு நடந்தவர்களெல்லாம் ஞானநிலையை யடையாதவராயின் தில்லைவாழந்தணர்கள் திருநாளைப்போவாரை அக்கினிப்பிரவேசம் புரிவித்துப் புனிதமாக்கியத் தவறுகவன்றோ முடியும்? இது ஸ்ரீ நடராஜப்பெருமான் கட்டளையன்றோ?

பக்தி முதிர்ச்சியால் வரம்புகடந்து எது செய்யினும் செய்யலாம். அதைத் தடுப்பாரில்லை. அவர் செயலைத்தடுத்தலும் இயலாது. அது குற்றமுமன்று. சேரமான் பெருமானாயனார் வண்ணானொருவன் உவர்மட்சுமையுடன் மழையில் நனைந்து வந்தமையால் அவனுடல் முற்றும் வெள்ளொளி படைத்திருப்பக்கண்டு விபூதி பூசிய மெய்யடியரென்று நினைத்துக் கீழ்வீழ்ந்துவணங்கினர். இஃது அந்நாயனாரது பக்தி முதிர்ச்சியால் நிகழ்ந்தது. இவ்வாறன்றி அவ்வண்ணான் வந்து "நான் சிவவேடம் பூண்டுளேன்." என்னை வணங்குதிர் என்னுடன் உண்ணுதிர் எனக்கூறுவானாயின் அவனுக்குக்கிடைப்பது இது வென்று கூறவேண்டுவதில்லையே.

தம்மினும் உயர்ந்த குலத்தாருடன் சமபோஜனஞ்செய்யவேண்டுமென்ற சுயநயங்கருதி அதன் பொருட்டு இப்போலிவேடதாரிகள் வஞ்சித்துக்கூறுகின்ற பிரசங்கங்கள் எத்துணையினிமையாகத் தோற்றப்படினும் சைவாதீனங்களிலே இவர்கள் வாய்ஞானம் மதிப்படைகின்றதா? அங்கே வந்தவுடன் தமது குறும்பை யடக்கித் தனியிருந்துண்டு வருகின்றனரே!

ஓடும் பொன்னும் ஒக்கநோக்கும் மெய்த்துறவிகட்கு எவ்விதக் கட்டுப்பாடுமில்லை. அத்துறவிகள்போல வேடம்பூண்டவர்களும் கொண்டகோலத்துக்கேற்ப எங்கேவேண்டுமாயினும் உண்ணட்டும். இவரைத்தடுப்பாரில்லை. விதிவிலக்குவரம்புகட் குட்பட்டு இல்லறவாசிகளாயிருப்பவர்களிடம் இந்தப் போலிப்பண்டித சுவாமிகள் வந்து தம்மையுடன்வைத்துண்ண வேண்டுமென்று செய்யும் பிரசங்கம் அதிகப்பிரசங்கமாதலாற்றான் இவர்கட்கு அறிவுறுத்தவேண்டியித்துணையுமெழுதினோமென்க.

"நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்"——திருக்குறள்

தில்லைவாணன்.

# மாலினீ மாதவம்.

## 10-வது அத்யாயம்.

## மேகங்கள்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

உலகம் யாவையும் ஒரு பெரிய நாடக சாலையாகவும், உலகத்திலுள்ள மனிதர்களை நாடகபாத்திரங்களாகவும், தேசகாலவர்த்தமானங்களுக்குத் தக்கவாறு உலகத்தின்கண் அடிக்கடி தோன்றும் மாறுபாடுகளை, அந்நாடககாட் (Seience) சிகளாகவும், கவிகள் வர்ணிப்பதுண்டு. ஆனால் உண்மையான நாடகசாலைக்கும், உலகத்தில் நடக்கும் அற்புதங்களுக்கும் அநேகவித்யாஸங்களுண்டு. நாடக சாலையில் நடப்பன யாவும், மனிதனுடைய ஆதீனமாய், 'மனிதனுடைய செய்கைகளாலேயே, மனிதனுடைய தன்னறிவுடன் நடக்க, உலக அமைப்பும் அதில் தோன்றும் மாறுபாடுகளும், எதிர்பாராது தற்செயலாய் மனிதசக்திக் குட்படாது ஸம்பவிக்கும் அற்புத ஸம்பவங்களும், அவைகள் நேரிடும் காலத்தில் மனிதனுடைய அனாதமான நிலைமை (Helplessness) யும், ஏதோ மனிதனுக்கும் மீறின ஓர் அற்புத சக்தியொன்றிருப்பதாகவும், அச்சக்தியின் வழிப்பட்டே ஸகலசராசரங்களும் நடைபெற்றுச் சலித்துக்கொண்டிருக்கின்றனவென்றும் தோன்றும்.' ஆனால் அவ்வாறு தோன்றும் அதிசய ஸம்பவங்களெல்லாம், ஏதாவது விதிக்குட்பட்டனவோ, அல்லது கேவலம் யாதொரு விதிக்குமுட்படாது மாயமாய் நேரிடுகின்றனவோ என்ற சங்கைகள் ஏற்படத்தக்கன. மனிதனது வாழ்வும், அவனனுபவிக்கும் அகதுக்கங்களும் தெய்வாதீனமென்று சிலரும், அவன்செய்த பூர்வ கர்ம வாஸனையால் அமைகின்றனவென்று சிலரும், எல்லாம் ப்ராக்ருதி விதிகளுக்குட்பட்டே நடக்கின்றனவென்றும், சமுத்திரங்களும், பெரிய அருவிகளும், மின்ஸாரங்களும், உபயோகப்படுவது போல, உலகத்திலுள்ளவையாவையும் மனிதனுடைய புத்தித திறமையால் உபயோகப்படுத்தி அடக்கியாளப்படலாமென்று சிலரும் கூறுகிறார்கள். இவைகளில் எந்த ஸித்தாந்தம் உண்மையாய் இருப்பினும், சிலசமயங்களில் திடீரென்று அதிசயமாய்ச் சில விஷயங்கள் ஸம்பவிப்பதும், அவை

களின் காரணங்கள் தெரியாத மனிதர்கள் தவிப்பதும் பிரதிதினமும் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

நமது மணிபுரம் மஹாராஜாவின் அரண்மனையின் ஆசாரவாசலில் இரண்டுபுறமும் இரண்டு கல்யாணைகளும், அவற்றின்பக்கத்தில், ராணுவஉடையும், உருவினகத்தியும், கையுமாய் இரண்டு துவாரபாலகர்கள், கம்பீரமான பார்வையுடன் ஒருவரையொருவர் நோக்கி நின்றுகொண்டிருக்கின்றார்கள். இவர்கள், தோள்களில் சிவப்பும் மஞ்சளும் கலந்த பட்டால தைத்த ஓர் 'டவாலி'யும், அதில் ஒரு வெள்ளி வில்லையும் தரித்துக் கொண்டிருக்கின்றனர்.

முன் அத்தியாயத்தில் கூறியுள்ள விருத்தாந்தங்கள் நடந்து சுமார் ஒருமணிநேரமிருக்கலாம். அந்நேரத்தில், உடல் எங்கும் காயமும் உடைகளெல்லாம் சிற்சில இடங்களில் கிழிந்தும், இரத்த வெள்ளம்பெருக, இரத்த வெறிகொண்டவன்போல் மாதவன் திடீரென்று தோன்றி, துவாரபாலகர்களை நோக்கி, 'ஏ! ஜவான்களே! சின்னராஜா இங்கே வந்தாரா?' என்று அதிக பரபரப்புடன் வினவ, ஜவான்கள், இவனுடைய வீரகோலத்தையும், இரத்தக்கறையையும், பரபரப்பையும் கண்டு திடுக்கிட்டு, மெய்ம்மறந்து, இவன் சொன்ன வார்த்தைகள் கூடக் காதில்படாதவர்களாய், ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டார்கள். மாதவன், யாதொரு பதிலுக்கும் எதிர்பாராதவனாய்ச் சரேலென்று அரண்மனைக்குட் புகுந்து தன் அறைநோக்கிச் சென்றான்.

இதற்குள் ஆசாரவாசல் முன்னிலையில், இவ்வதிசயம் என்னவென்று ஆவலுடன் வினவிக்கொண்டு திரள் திரளாய் ஜனங்கள் கூடிவிட்டார்கள். ஜவான்களுக்கோ தங்கள் நினைவுவரச் சுமார் இரண்டுநிமிஷங்களுக்கு மேலாயின. தாங்கள் பார்த்த கொடுங்காட்சியின் விவரம் இன்னதென்றும், அதன்காரணம் இன்னதென்றும அறியாதவர்களாய்க் கண்டதெல்லாம் கனவோ என்று பிரமிக்க ஆரம்பித்தார்கள். மாதவன் ஒருவேளை வீரவெறிகொண்டு (running amok) யாரையாவது கொலை செய்துவிட்டு இரத்தவெறியால் இவ்வாறு ஓடுகின்றானோ, இன்னும் யாராரைக் கொன்றுவிடுவானோ என்று ஜனங்களெல்லோரும் பயந்து நடுநடுங்கி 'ஹா! ஹா! ஹா!', என்று பயக் கூக்குரலிட்டார்கள்.

இதற்குள் தனது பொற்கதிர்களை பத்துத் திக்குகளிலும் வீசி உலகம் யாவையும் ஏகசக்ரதரனாய் ஆள்பவன் போல் மேற்றிசையில் ப்ரகாசித்துக் கொண்டிருந்த சூர்யனது பிம்பம் திடீரென்று மேகங்களால் மறைக்கப்பட்டது. ப்ரளயகாலத்தில், இந்திரனால் விடுபட்ட ஸப்தமேகங்களோ என, மேகங்கள் கர்ஜித்து ஆகாயம் எங்கும் மறைத்துவிட்டன. இருண்டமேகங்களின் இடையிடையே பளிச், பளிச் என்ற மின்னல்களும், கட, கட, கடவென்ற இடி முழக்கங்களும் கலந்து கலந்து உண்டாயின. கடல்முழுதும் வானத்தில் தொங்குவதுபோலத் தோன்றிற்று. ஒரே தாரையாய் மழை பொழிய ஆரம்பித்தது. எதிரிகளின் பீரங்கிக்கு எதிர் நிற்க மாட்டாத போர் வீரர்கள்போல, மனிதர்கள் நாலாபக்கமும் சிதைந்து ஓடத் தலைப்பட்டார்கள். சற்றுமுன் மனிதர் நாடாயிருந்த அம்மணிபுரமெல்லாம் நிமிஷ நேரத்தில் வெள்ளக்காடாக மாறியது.

இதற்குள், அரண்மனையெங்கும் ஒரே அலங்கோலமாகவும், அழுகைக் கூக்குரலாகவும், மனிதர்களும் பரிசாரகர்களும், ஸேவகர்களும், அடைப்பக்காரர்களும் முன்னேடுவதும் பின்னேடுவதும் கண்டவாறு பிதற்றுவதும், தங்கள் தங்கள் மனோவேதனைகளைத் தெரிவிப்பதுமாக, எங்கு பார்த்தாலும் ஒரே 'கலவரமாய்' (Confusion) முடிந்தது. "கொலை! கொலை! கொலை!" என்ற வார்த்தை ஒவ்வொருவர் நாவினின்றும் எதிரொலித்தது.

அரண்மனையில் ஒரு பெரிய அறையில் நமது பாலூர் மஹாராஜா சோபாவிற் சாய்ந்து மூர்ச்சையாய்க் கிடக்கின்றார். பக்கத்தில் மாலினி, நின்றுகொண்டு அண்ணா! அண்ணா! அண்ணா! என்று கதறுகிறாள். 'கமலா' கூடியவரை தன்மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு மாலினியைச் சமாதானம் செய்துகொண்டிருக்கின்றாள், அநேக பரிசாரகர்கள், பாலூர் மஹாராஜாவுக்கு முகத்தில் பனி நீர் தெளிப்பதும், மயில்தோகை விசிறிகளாலும், விளாமிச்சைவேர் விசிறிகளாலும் வீசிக்கொண்டிருப்பதுமாய்ப் பக்கத்தில் நிற்கின்றார்கள்.

இந்நிலைமையில் பாலூர் மஹாராஜாவுக்குச் சற்று மூர்ச்சை தெளிந்து கண்களைவிழித்ததும், தன்னினைவடைந்து, "அப்பா! தினகர! தினகர! என் கண்மணி! கண்மணி!" என்று கதறினர். இதற்குள் மணிபுரம் மஹாராஜா பரபரப்புடன் பிரவேசமானர். பாலூர ஜமீன்தார் அவரை நோக்கி "என்னவென்று' விசாரித்தார்களா?" என்று வினவ,

மணிபுரம் ஜமீன்தார்:—"ஒன்றும் சொல்லுகிறானில்லை. ஏதோ இரத்த வெறியால் நரசிம்ம மூர்த்திபோல் பயங்கரமாயிருக்கிறான். மாதவன் கேட்ட கேள்விகளுக்கு உம்முடைய ஜோஷியைப் பார்த்துப்போம் என்கிறான். மாலினியும் கமலாவும் தெரிவித்த விருத்தாந்தங்களையும் இப்பொழுது மாதவன் இருக்கும் நிலைமையையும் கவனித்தால் நாம உத்தேசித்த பிரகாரம் தான் நடந்து விட்டது போலிருக்கிறது" என்று பதட்டத்துடன் சொல்ல,

பாலூர் மஹாராஜா:—"அப்பா! என்னப்பனே! நான் என்னடா செய்வேனடா? ஐயோ! வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல, — ஐயோ! ஐயோ!" என்று கதறினர். இதற்குள் துவாரபாலகர்கள் பிரவேசமாகிச் சற்றுமுன் தங்களுககு முன்னிலையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தார்கள். அடைப்பக்காரச் சோணை நெஞ்சும் மார்பும் படபடவென்று' துடிக்கப் பெருமூச்செறிந்து கொண்டு அதிக வேகமாய் உள்ளே பிரவேசிக்க,

மணிபுரம் ஜமீன்தார்:—"சோணே! என்னவாவது சமாசாரம் தெரிந்ததா? என்று கம்பீரமாய்க கர்ஜிக்க,

சோணை:—"மஹாராஜா! நாய்க்குட்டி உத்தரவாச்சே சா இல்லையா மூலைக்குமூலை திக்குத் திக்காய் ஆள் அனுப்பி விட்டேன். சின்ன மஹாராஜாவைக் காணவே காணுமாம். வெள்ளக்காடாக் கிடக்குதாம். சித்தாந்தக் கடவிலே இடுப்புத தண்ணி போகுதாம். எல்லாம் அடிச்சக்கிட்டுப் போகுதாம். வேலாமரத்தண்டை இரத்தத் தலைப்பாவும், கத்திப்பிடியும் கிடந்திச்சாம். தோட்டக்கார இருளன் கொண்டு வந்தான்." என்று சொல்லிக்கொண்டு ஓர் தலைப்பாகையையும், கத்திப் பிடியையும் மணிபுரம் ஜமீன்தார் கையில் கொடுக்க, பாலூர் மஹாராஜா திடீரென்று அந்

தலைப்பாகையைப் பிடுங்கிப் பார்த்துவிட்டு, "ஐயோ! என் குழந்தை தினகரன் தலைப்பாகையல்லவா? ஐயோ! என்னப்பா தினகரா! தினகரா! தினகரா!" என்று கத்திக் கொண்டு அப்படியே சோபாவிற் சாய்ந்து மறுபடியும் மூர்ச்சை யடைந்தார். மறுபடியும் பரிசாரகர்கள் வேண்டிய உபசரணைகள் செய்ய ஆரம்பித்தார்கள். இதற்குள் மணிபுரம் ஜமீன்தார் தன் கையில் கொடுக்கப்பட்ட வாளின் பிடியை நுட்பமாய்ப் பரிசோதிக்க ஆரம்பித்தார். அகத்தியின் முன்பாதி ஒடிந்து காணமற் போய்விட்டது. அடிப்பாதி மாத்திரம் பிடியில் இருந்தது. அப்பாகத்தில் 'மாதவன்' என்ற பெயர் வரையப் பட்டிருந்தது. இனிக்கேட்பதேன்! சந்தேகம் தெளிந்து விட்டது. இதற்குள் பாலூர் ஜமீன்தார் மூர்ச்சைதெளிந்தெழ, இக்கத்தி லாக்ஷயமும் தெரிவிக்கப்பட்டது. 'கொலை! கொலை! கொலை!' என்ற வார்த்தைகள் எங்கு பார்த்தாலும் எதிரொலிக்கத் தலைப்பட்டன. ஐயோ! ஐயோ! என்று கதறுபவர் சிலர். கண்ணுங் கண்ணீருமாய் ஜடம்போல நிற்பவர் சிலர். 'என்னடா அநியாயம் பட்டப்பகலில்!' என்று கர்ஜிப்பவர் சிலர். பலர் பலவிதமாய்த் தங்கள் தங்கள் மனோ வேதனைகளைத் தெரிவிக்க எல்லாம் சேர்ந்து ஏக 'ரகளை' யாய் முடிந்தது.

இதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹரிராவ், 4, 5 'கான்ஸ்டேபிள்'களுடன், கத்திகள், துப்பாக்கிகள், விலங்குகள் சகிதம் பயங்கரமான கோலம்பூண்டு, தன்மீசை பட பட வென்று துடிக்கக் கோபாவேசத்துடன் பிரவேசமானார். அரண்மனைவாசல் தோறும் 'பாராக்கள்' வைக்கப்பட்டன. உள்ளே இருந்தோர் வெளிச்செல்ல முடியாமலும், வெளியேயுள்ளோர் உட்புக முடியாமலும், ஒருவருக்கொருவர் தகவல் கொடுக்க முடியாமல் பந்தோபஸ்து செய்யப்பட்டது.

இன்ஸ்பெக்டர் பிரவேசமானதும், அங்கிருந்தோர் அவருக்கு வழிவிட்டுவிலகிப் பக்கத்தில் ஒதுங்கி நின்றார்கள். அவர் நேரே சென்று, நமது ஜமீன்தார்கள் பக்கத்தில் நிற்க, நமது மணிபுரம் ஜமீன்தார், வாருங்கள் ஸார்! உட்காருங்கள் என்று மரியாதையாய் அழைத்து ஓர் ஆசனத்தைக் காட்ட, இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து,

கொண்டு அதிகமாக மரியாதைகள் பரிவர்த்தனைகள் செய்யாமல் தன்காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தார். தன் உடைப்பையினின்றும் ஓர் சிறு புஸ்தகத்தை யெடுத்து, வாக்குமூலங்களைக் குறிக்க ஆரம்பித்தார். மாலினி, கமலா, துவாரபாலகர்கள், இருளன், மணிபுரம் ஜமீன்தார் முதலானவர்கள் முறையே வாக்குமூலங்கள் கொடுத்தார்கள்.

இன்ஸ்பெக்டர் தனது 'பென்ஸி'லை தன்பற்களில் வைத்துக் கடித்துக்கொண்டு, இடக்கையால் தன்மீசையைக் கதிர்போல் முறுக்கிக்கொண்டு, அண்ணாந்துபார்த்துச் சற்றுநேரம் ஆழ்ந்தயோசனையிலிருந்துவிட்டுக் கடைசியாக, "சரி, மாலினி மாதவனை விவாகம் செய்துகொள்ளும் விஷயத்தில் தினகரனுக்குச் சம்மதமில்லை—சேய்கை நேரத்தில்—செய்கை ஜாகாவில்,-மாலினியும் மாதவனும் தனித்திருப்பதைத் தினகரன் பார்த்துவிட்டான். அப்பொழுதே இவர்களுக்கும் சச்சரவுண்டாய் விட்டது. இதுவரை ஒன்று, இரண்டு ஸாக்ஷிகள் வாக்குமூலம் ருஜுவாகிறது. தினகரனைக் காணவில்லை. சிற்றாற்றில் வெள்ளம் அதிகமாய்ப் போகிறது. அதன் கரையில் வேலாமரத்தண்டை தினகரன் தலைப்பாகையும் மாதவனுடைய ஒடிந்த கத்தியும் கண்டுபிடிக்கப் பட்டது. தோட்டக்கார இருளனால்—மாதவன் இரத்த வெறியோடு அரண்மனை புகுந்திருக்கிறான். இதற்கு ஜவான்கள் ஸாக்ஷி—ஒடிந்த கத்தி மாதவனுடையதுதான்—சரி! சரி! சரி!—இப்படித்தான்—ஆமாம். இப்படித்தான்—இருக்கவேண்டும்," என்று தனக்குள் ஒருவாறு தீர்மானித்துக் கொண்டு, பக்கத்திலிருந்த கான்ஸ்டேபில்களை நோக்கி, அடே 393!, 765!, 117! நீங்கள் மூவரும சென்று மாதவனை (அரெஸ்டு) பண்ணி 'போலீஸ்டேஷன்' (லாக்அப்) பில்வையுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். உடனே மூவரும் பிரிந்து சென்றார்கள். இன்ஸ்பெக்டர், உடனே ஸாக்ஷிகளை நோக்கி, "நாளை ஒரு வேளை துரை வருவார். தவறாமல், இதுபோலவே—ஸாட்சி சொல்ல வேண்டும்—ஞாபகம்" என்று எச்சரித்து விட்டு மற்ற இரண்டு கான்ஸ்டேபில்களுடன் வெளியே சென்றார். (இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.

# சிவனடியார் பெருமை.

"சிவனடியார்கள்" என்பது சிவபெருமானது திருவடிகளையே பொருளெனக் கொண்டு ஒழுகுகின்ற பெரியோர்களைக் குறிக்கும்; அத் திருவடிகள் ஸ்தூலத்திற் பல அரிய விஷயங்களடங்கிய ஸ்ரீ: தியாகராஜப் பெருமானது திரோபவ அநுக்கிரஹ கிர்த்தியங்களைக் காண்பிக்கின்ற திருவடிகள் போன்றும், சூக்ஷ்மத்தில் அவருடைய ஸர்வஞ்ஞத்துவம் (எல்லாம் உணரும் செய்கை) ஸர்வகாகத்துவம (எல்லாம செய்யும் செய்கை) ஆகிய குணங்களில் ஆன்மாலயப்படுதல் என்றும் கொள்ளல்வேண்டும். இவ்வருமையும் பெருமையும் வாய்ந்த திருவடிகளை யடைவதற்கு முக்கிய சாதனம் அவிாவறுதலே. இதனைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

> பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"—

என்றும் "அற்றது பற்றெனின் உற்றது வீடு" என நம்மாழ்வாரும் கூறியுள்ளார்கள். ஆகவே உலகப் பற்றை முற்றுந்துறந்து, சர்வலோக சரண்யனாகிய சிவபெருமானது, திருவடிகளை யடைந்தவர்களே, "சிவனடியார்கள்" என்பது இனிது பெறப்பட்டது அவ்வடியார்களையே சிவமெனக்கொண்டு வழிபட்டு ஒழுகவேண்டுவது நம்மவர்க்கு முக்கிய கடமையாம்.

ஏனெனில்,

> "முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
> பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
> சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
> அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே""

என்ற மணிவாசகப் பெருமானது திருவாக்கினாலும், சிவஞானபோதம்,அடைந்தோர்ப்பேறுகூறும்பன்னிரண்டாஞ்சூத்திரமாகிய,

> "செம்மலர் நோன்றாள் சேர வொட்டா;
> அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
> மாலறநேய மலிந்தவர்வேட
> மாலயந் தானு மரனெனத்தொழுமே"

என்பதனாலும், அதன்பாஷ்யாதிகளாலும் தெளிவாய் விளங்குகின்றது. பின்னும் மெய்கண்டதேவர்க்குச் சூரணிக் கொத்தை யுபதேசித்த பொல்லாப்பிள்ளையார் "சிவனடியாரையும் சிவலிங்கத்தையும் சிவமெனவே தேறி வழிபடுகவென்றனுக்கிரகித்த மகாவாக்கியத்தாலுந் தெற்றென விளங்குகின்றது.

உலகத்திலும் சிவனடியார்களுக்குச் "சரலிங்க" மென்ற பெயர்வழங்குதலானும் இவர்களுக்குச்செய்யும் ஆராதனை முதலிய வைகளுக்கு மஹேசுவர பூஜையென்று பெயர் வழங்குதலானும் யாவரும் எளிதினி லுணரலாம்.

இனி இவர்கள் சிவமேயானது எதனாலெனின், சிவசத்தியின் ஸ்வரூபமாகிய விபூதியை யணிந்தும் சிவபெருமானுடைய வடிவையுணர்த்தும் ருத்திராக்ஷத்தைச் சதா தரித்தும் வாசனாமலத்தைப் போக்குதற்குரிய ஸ்ரீ பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை, யுள்ளவாறுணர்ந்து ஜபித்தும், சிவபெருமானது பகிர்யாக அந்தர்யாகப் பூசைகளைச்செய்தும், "சோகம்பாவனை"யால் அவனே தானேயாகி யுவண் நெறியாகியும் இருத்தலால் என்க. இவர்கள் மகிமையை அப்பர்ஸ்வாமிகள் "குலம் பலம் பாவருகுண்டர் முன்னே" என்று திருவாய்மலர்ந்தருளிய பதிகத்து ஒவ்வொரு பாசுரத்திலும் "ஆநர் அவிர்சடையான்தொண்டர்கருத்தொண்டராம்புண்ணியமே" என்று உபதேசித்திருப்பதாலும், சேக்கிழார்ஸ்வாமிகள்பெரியபுராணத்துள்,

"ஆரங் கண்டிகை யாண்டயுங் கந்தையே
பாரமீசன் பணியல தொன்றிலா
ரீர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ.

கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனும் ஒப்பவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்றும், ஸ்ரீ: சுந்தரமூர்த்திஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையாலும், அதினுள்ளும் "பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்" என்னும் பாசுரத்தாலும் யாவருமெளிதி லுணரக் கூறப்பட்டிருக்கிறது.

T. S. தியாகராஜ ஞானியார்,
"கமலாலினி" ப்பத்திராதிபர்.

# முத்ரா ராக்ஷஸம்.

(311-ம் பக்கத்தொடர்ச்சி)

[:o:]

சாரணன்:—"மூன்றாவது சந்தனதாஸன் என்ற ஓர் இரத்தின வியாபாரி அவன் புஷ்பபுரியில வஸிப்பவன். மந்திரி ராக்ஷஸனுடைய இரண்டாவது ஹிருதயம் போன்றவன். அவன் வீட்டில் தான் தன் ஸம்ஸாரத்தை ஒப்புவித்துவிட்டு, ராக்ஷஸன் நகரைவிட்டு ஓடிப்போனான்"

சாணக்யன்:—(தனக்குள்) "அப்படியானால் அவன் முக்கிய நண்பனாயிருக்கவேண்டும். தன்போன்றவர்களல்லார் வீட்டில் ராக்ஷஸன் தன் ஸம்ஸாரத்தை ஒப்புவிக்க மாட்டான்" (வெளிப்படையாய்) "மித்ர! சந்தனதாஸன் வீட்டில் ராக்ஷஸன் தன் ஸம்ஸாரத்தை ஒப்புவித்தான் என்பதை நீ எவ்விதமறிந்தாய்?"

சாரணன்:—"ஆர்ய! இக்கணையாழிமோதிரத்தால் தேவரீர் எல்லாமறிந்து கொள்ளலாம்" (என்று மோதிரத்தைக்கொடுக்கிறான்)

சாணக்யன்:—(மோதிரத்தைப்பார்த்து ராக்ஷஸன் பெயரை வாசிக்கிறான். ஸந்தோஷத்துடன் தனக்குள்) "ஆஹா! ராக்ஷஸனே நமது விரலின் சிகரம் தேடி வந்துவிட்டான் போலும்! (வெளிப்படையாய்) மித்ர! இம்மோதிரம் உனக்குக்கிடைத்த விதத்தை விஸ்தாரமாய்க் கூறுவாய்"

சாரணன்:—"தேவரீர் கேட்டிருக்கவேண்டும். இந்த நகர்வாஸிகளின் நடத்தைகளைக் கவனித்துவருமாறு தேவரீர் ஆஜ்ஞாபித்த பிரகாரம் பின் வீடுகளில் பிரவேசிக்கையில் என்மீது ஒருவரும் சந்தேகம் கொள்ளாவண்ணம் இந்த யமபடத்தைக்காட்டிக்கொண்டு சுற்றித்திரிந்து வருகையில் தற்செயலாய் இரத்தினவியாபாரி சந்தனதாஸன் வீட்டிலும் நுழைந்தேன். அங்கேயும் யமபடத்தை விரித்து பாட்டுப்பாட ஆரம்பித்தேன்.

சாணக்யன்:—"அப்படியா? பிறகு என்ன நடந்தது?"

சாரணன்:—"அப்பொழுது சுமார் ஐந்துவயதுள்ள ஓர் பாலன் பார்க்க ரம்யமான சரீர அழகு வாய்ந்தவன், குழந்தைகளுக்கு இயற்கையாயுள்ள குதூகலத்தால் முகமலர்ச்சியுடன் ஆங்கோர்

வாசல்வழியாய் ஓடிவர ஆரம்பித்தான். அப்போது அவ்வாசலின் உட்புறத்திருந்து 'ஐயோ வெளியே போய்விட்டானே!' 'ஐயோ வெளியே போய்விட்டானே!' என்று ஏதோபயக்குறிகாட்டக் கூடியதும், ஸ்த்ரீகளால் போடப்பட்டதுமான ஓர் பேரிரைச்சற் கேட்டது. அப்பொழுது அந்தப்பாலன் வெளியே வருஞ்சமயத்தில ஓர்பெண்மணி அப்பாலனைத் தொடர்ந்துவந்து பயமுறுத்தி அழகிய கொடிபோன்ற தன் கரங்களால் அவனைப் பிடித்துச் சென்றாள்; அப்பொழுது அவள் முகம் மாத்திரம் கொஞ்சம் அவ்வாசலுக்கு வெளியே தெரிந்தது. புருஷன் விரலளவுக்குச் செய்யப்பட்ட இம்மோதிரமானது அப்பாலனைத்தடுக்கும் அவஸரத்தில் அவள் கையினின்றும் வழுவி அவளுக்குத் தெரியாமல் நடையில் விழுந்தது. அங்கிருந்து கிளம்பி யுருண்டோடி வந்து என்கால்களின் கீழ் நமஸ்கரிக்க வந்த ஓர் குலமாதுபோல் நின்றுவிட்டது. அதில் ராக்ஷஸனுடைய பெயர் வரையப்பட்டிருப்பது கண்டு நானுமதைத் தேவரீர் பாதங்களில்சேர்ப்பித்தேன். இதுதான் இம்மோதிரம் வந்த விதம்".

சாணக்யன்:—"மித்ர! ஸந்தோஷம! எல்லாம் கேட்டுக்கொண்டேன். நீ போகலாம். கூடிய சீக்கிரத்தில் உன் சிரமத்திற்குத்தக்க வெகுமானமடைவாய்."

சாரணன்:—"தேவரீர் உத்தரவுப்ரகாரம்!" (போகிறான்)

சாணக்யன்:—"சார்ங்கரவ! சார்ங்கரவ!"

(பிரவேசம்: சிஷ்யன்)

சிஷ்யன்:—"குருச்ரேஷ்டரே! ஆக்யாபித்தருளவேண்டும்"

சாணக்யன்:—"குழந்தாய்! மைக்கூடும் கடிதமும் எடுத்துவா"

(சிஷ்யன் அப்படியே செய்கிறான். சாணக்யன் கடிதத்தை எடுத்துக்கொண்டு தனக்குள், "இப்பொழுது இதில் என்ன எழுதவேண்டும்? இந்தக் கடிதமூலமாய் இந்த ராக்ஷஸனை ஜயித்ததாகவேண்டும்" என்றெண்ணிக் கொண்டிருக்கையில்)

[பிரவேசம்: துவாரபாலன்]

துவாரபாலன்:—"ஆர்ய! ஜயவிஜயீபவ"

சாணக்யன்:—(ஸந்தோஷத்துடன் தனக்குள்) "ஜயசப்தம் கேட்கின்றது! (வெளிப்படையாய்) சோணோத்தர! நீ வந்த கார்யம் யாது?"

துவாரபாலன்:—"ஆர்ய! சந்த்ரகுப்த மஹாராஜன் தன் சிரமீது தாமரை மொட்டுப்போல் தன் கரங்களைக் குவித்துத்தெரிவிக்கச் சொல்லுகிறார்—"

சாணக்யன்:—"என்ன? என்ன?"

துவாரபாலன்:—"அதாவது தேவரீர் அநுமதியின் பேரில் காலஞ்சென்ற பர்வதேசவரமஹாராஜனுக்கு அபரக்ரியை செய்வதாயும் அன்னவனால் தரிக்கப்பட்டிருந்த ஆபரணங்களை ப்ராஹ்மணர் பொருட்டு விநியோகம் செய்வதாயும்—"

சாணக்யன்:—(சந்தோஷத்துடன் தனக்குள்) "ஸந்தோஷம் சந்த்ரகுப்த! ஸந்தோஷம்! என்னு(மனது)டன் ஆலோசித்தே நீஇவ்வொன்றையும் செய்துவருகின்றாய். (வெளிப்படையாய்) சோமோத்தரா! சந்த்ரகுப்தனிடம், "குழந்தாய்! நிரம்ப சந்தோஷம்! உலக வ்யவஹாரங்களெல்லாம் நீ நன்றாய் அறிந்திருப்பதைப்பார்க்க நமக்கு நிரம்ப ஸந்தோஷம். உன் இஷ்டப்படி செய்யலாம். ஆனால் முன் பாவதேசவரமஹாராஜனால் தரிக்கப்பட்ட விசேஷ ஆபரணங்களெல்லாம் விசேஷ குணம்வாய்ந்த ப்ராஹ்மணர்களுக்கே தானம் செய்யவேண்டும். ஆதலால் நானே பரீக்ஷித்து அப்படிப்பட்ட குணிசீலிகளான ப்ராஹ்மணர்களை அனுப்புகின்றேன்" என்று நான் சொன்னதாகச் சொல்"

துவாரபாலன்:—"தேவரீர் உத்தரவு ப்ரகாரம்" (போகிறான்).

சாணக்யன்:—"சார்ங்கரவ! விசுவாவஸு முதலான மூன்று சகோதரர்களும் சந்த்ரகுப்தமஹாராஜனிடமிருந்து ஆபரணங்களைத் தானம் பெற்றுப் பிறகு நம்மை வந்து பார்க்கும்படி அறிவிக்க வேண்டும்"

சிஷ்யன்:—"'அப்படியே!" (போகிறான்.)

சாணக்யன்:—"இதைப்பற்றிப்பின்னால் எழுதிக்கொள்வோம்! முதலாவது என்ன எழுதவேண்டும்? (ஆலோசித்து) ஆ! தெரிந்தது. மிலேச்சராஜனைச் சேர்ந்தவர்களுள் முக்கியமான ஐந்து அரசர்கள் அதிக நட்புடன் ராக்ஷஸனை அனுசரிக்கின்றனர். அவர்களாவார்—குலூததேசாதிபதியான சித்ரவர்மன், மலயதேசாதிபதியும், மனிதர்களுள் ஸிம்மம்போன்ற பராக்ரமமுடையவனுமான ஸிம்மநாதன், காச்மீரதேசாதிபதியான புஷ்கராக்ஷன், தன் பகைவர்களின் கர்வபங்கம் செய்த ஸிந்துதேசாதிபதியான ஸிந்துஷேணன், ஐந்தாவது, பெருத்த குதிரைப்படையுடன் கூடிய பாரஸீக தேசத்தரசனான மேகன் இவ்வைவர் பெயர்களையும் இப்பொழுது நிச்சயம் எழுதுகிறேன். (கூடுமானால்) சித்ரகுப்தன் அழிக்கட்டும். (ஆலோசித்து) ஆனால் எழுதாவிட்டால்தானென்ன? முதல்பாகம்தெளிவில்லாமலே இருக்கட்டும்—" (எழுதுவதாய்ப்பாவனை செய்து) சார்ங்கரவ!

(ப்ரவேசம்: சிஷ்யன்)

சிஷ்யன்:—"குருச்ரேஷ்ட! ஆக்ஞாபிக்கவேண்டும்"

சாணக்யன்:—"குழந்தாய்! ப்ராஹ்மணன் எவ்வளவு ப்ரயாஸப்பட்டு எழுதினாலும், அவ்வக்ஷரங்கள் தெளிவாய் இருக்கவில்லை. ஆதலால், ஸித்தார்த்தகனிடம் நான் சொன்னதாகச்சொல்".

R. வேங்கடநாராயண சர்மா. B. A, B. L.

# ஸர் ஐஸாக் நியூடன்

(300-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிற்றப்பனுதியோர் சிபார்சு செய்தபடியே, நியூடனின் தாயார் அவரை மறுபடியும் கேம்பிரிட்ஜ் பட்டணத்தில் டிரினிடி கல்லூரியில் சேர்த்தனர். அப்பொழுது அவர்க்கு வயது 19. ஒருநாள் சந்தையில் சோதிட நூல் ஒன்று பழவிலைக்கு வாங்கினர். ஆயினும் அதை அறிவதற்கு முதற்காரணமாயிருந்த திரிகோண அளவுநூல் அவர்க்குத் தெரியாததலால் அந்நூலிற் கண்டுள்ள விஷயங்களும் அவர்க்குப் புரியவில்லை. பிறகு அவர் யூக்லிட் என்பவரது கணிதசாஸ்திரம் சிறிதே பயின்றார். பின்பு, பிரான்ஸ் தேச தத்வ சாஸ்திரியான டேகார்ட் என்பவர் எழுதிய கணித சாஸ்திரத்தை ஆவலோடு படித்தார். 1664௵ எப்பிரல்௴ 28உ நடந்த பரீக்ஷையில் அவர் யூக்லிட் கணித சாஸ்திரத்தில் மார்க்கு மிகவும் குறைவாக வாங்கினபடியால் அவருடைய ஆசாரியரான டாக்டர் ஐஸாக் பார்லோ என்பவர் மிகவும் கண்டித்து அக்கணித சாஸ்திரத்தை ஜாக்கிரதையுடன் வாசிக்கச்சொன்னார். இவர் டேகார்ட் கணித சாஸ்திரத்தைப் படித்தபிற்குதான் அச்சாஸ்திரத்தில் மிகவும் ஆவலுண்டாகிக் கோணங்களைப்பாகம் பண்ணுகிறதற்கும், வளைந்தகோடுகளை (Curves) அளப்பதற்கும், தூரதிருஷ்டிக்கண்ணாடிகள் செய்வதற்கும் பல புதிய விதங்களைக் கண்டுபிடித்தார். இவர் வானசாஸ்திரத்திலும் தன் பயிற்சியைக் காண்பித்தார். இவர் 1665-ம் வருஷத்தில் (அதாவது 23வது வயதில்) B. A. பரீக்ஷை தேறினர். உடனே சில மாதங்களுக்குப்பிறகு, 'Tluxious' என்னும் வழியைக் கண்டுபிடித்து "Differential calculus" என்று சொல்லப்படும் கணித சாஸ்திரத்திற்கு அஸ்திவாரம் போட்டார். இவர் 1666 வருஷம் முதல் 1669-ம் வருஷம் வரையில் ஒளிநூலி (Optics) ற்சேர்ந்த அநேக சங்கதிகளைப் புதிதாய்க் கண்டுபிடித்தார். இவர் (Algebra) அல்ஜிப்ராவில் ஒரு வியாஸம் எழுதித்தன் குருவாகிய Doctor Isace Borlow வினிடம் கொடுக்க அவரதைக்கண்டு மிகவும் புகழ்ந்துபேசினர். அன்றியும் அவருடைய குரு சில மாதங்களுக்குக்கெல்லாம் தம் வேலையை விடும்போது இவரை அந்தவிடத்திற்குப் பலமாக சிபார்சு செய்து

இவரைத் தவிர (England) இங்கிலாந்து தேசத்தில் கணித சாஸ்திரத்தில் பெரிய அதிகாரி இல்லையென சொல்லி நியமித்தார். இவர் இந்த கௌரவமான வேலையிலிருந்து கணித சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், ஒளிநூல் இவைகளைப்பற்றி பிரசங்கம் செய்து வந்தார். வானசாஸ்திர ஸ்தாபனத்திற்கு முக்கியமான கருவியாகிய தூரதிருஷ்டிக்கண்ணாடி ஒன்றைக் கண்டுபிடித்து அதைப்பற்றிய வியாஸத்தை (ராயல் ஸொஸைட்டி) "Royal Society" என்படும் ராஜாங்கசபையில் அரங்கேற்றி அச்சபையில ஓர் அங்கத்தினராகி, சிறிது காலத்துக்கெல்லாம் அச்சபையின் அக்கிராசனாதிபதியும் ஆனார். இந்த வியாஸத்தினால் அவர் ஒளிநூலில் எவ்வளவு சங்கதிகள் புதிதாய்க் கண்டுபிடித்தார் என்பது உலகத்துக்கு வெளியாயிற்று. இதைக் கேள்வியுற்று பிரான்ஸ், ஜெர்மனி முதலிய தேசத்திலிருந்த கணித புலவர்களெல்லாம் இவரை அடிக்கடி வந்து பார்த்தும் அடிக்கடி சம்பாஷணைகள் செய்தும் நேரிலாவது கடிதங்கள் மூலமாவது அடிக்கடி சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டிருக்க ஆரம்பித்தார்கள்.

1666-ம் வருஷம் ஒரு நாள் இவர் ஒரு அத்தி (Apple) மரத்தடியில் உட்கார்ந்திருந்தபோது அம்மரத்திலிருந்து ஒரு பழம் கீழே விழுவதைப் பார்த்து "பூமியின் கிராஹ்ய சக்தி"யைக் கண்டு பிடித்தனர். 1820 வருஷம் வரையில் அம்மரமானது பாதுகாக்கப்பெற்றது. பிறகு மிகவும் க்ஷீணதசையை யடைந்தமையால் வெட்டப்பட்டும் அதன் வெட்டுகட்டைகள் இன்னும் வைக்கப்பட்டிருக்கின்றன. பூமியினுடைய இந்த "கிராஹ்ய சக்தியே" சந்திரன் பூமியைச்சுற்றிப்போகும் காரணமாயிருக்குமென எண்ணி இவர் அநேக விதமான ஆராய்ச்சிகளைச் செய்தார். கேப்ளர் என்னும் வானசாஸ்திரி கிரகங்களெல்லாம் சூரியனைச்சுற்றிக் கோழிமுட்டை வடிவான வழியில் போகின்றனவென்பதையும், தன்னுடைய கிராஹ்ய சக்தியையும் சேர்த்து வானசாஸ்திரத்தில் அநேக புதிய சங்கதிகள் கண்டுபிடித்தார். அந்தக் காலத்தில் (அதாவது 1684-ம் வருஷத்தில்) ரேன், ஹாலி, ஹூக் என்னும் புலவர்களுக்குள் கிராஹ்ய சக்தியால் ஒன்றை ஒன்று சுற்றும்வழி எவ்வடிவமானது என்று வந்த தர்க்கத்தை இவரே மத்தியஸ்தராயிருந்து தீர்த்துவைத்தார்.

அடுத்த இரண்டு வருஷங்களில், (அதாவது 1685, 1686-வது வருஷங்களில)Flumsteed என்று சொல்லப்படும் ராஜாங்க வான சாஸ்திரியுடன் கலந்து வானசாஸ்திரிக கருவிகளால் வானத்தைப் பரிசோதித்து சாஸ்திரத்தைச் சீர்திருத்த ஆரம்பித்தார். 1686 வருஷத்தில் இவர் "Principia"என்றுசொல்லப்படும் அற்புதமான கணித சாஸ்திரத்தின் ஒரு பாகத்தை எழுதி ராஜாங்க சபையில் அரங்கேற்றி அதை அச்சிட்டு 1687-ம்வருஷம அதை முடித்தார்.

1689ம்வருஷத்தில் சர்வகலாசாலையின் சட்டசுதந்திர("Legal priviliges") ங்களைப் பற்றி மிகவும் வஹுத்தசண்டைபோட்டு பாராளுமன்றி (Parliment)ல் சர்வகலாசாலை மெம்பராக நியமிக்கப் பெற்றார் இவ்வருஷத்தில்தான் இவர் லாக் என்னும் தத்துவ சாஸ்திரியோடு சிநேகமானார்: இப்போது இவருக்கு 55வயதாய் விட்டது. இவருடன் கூடப்படித்தவர்களில் அநேகர் உயர்ந்த சம்பளங்களில் நல்லீ ஸ்திதியிலிருந்தார்கள். இவருடைய சிநேகர்களெல்லாரும் சேர்ந்து இவருககு நல்ல உத்தியோகம சம்பாதித்துக் கொடுககவேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அக்காலத்திலுங் கூட, உபாத்தியாயராயிருப்பதைக் காட்டிலும் அதிக கௌரவமான உத்தியோகங்கள் உண்டென்றும் அத்தொழிலில் பணம் கிடைக்காதென்றும் எல்லாரும் எண்ணினார்கள். இவர் கெட்டிக்காரரென்று சமாசாரப்பத்திரிகைகளில் பலவிதமாய்ப் புகழ்ந்து பேசுவதோடு நின்றதே தவிர இவருக்கு நல்ல ஸ்திதியையும் சௌக்கியத்தையும் கொடுக்கவேண்டியதற்கான எதுவும் தேடப்படவில்லை.

1692-ம் வருஷம் முதல் 18 மாதங்களுக்கு இவர் (Phrenitis) என்ற வியாதியால் மிகவும் அவஸ்தைப்பட்டார். 1694 வருஷத்தில் மாதம் 700 ரூபாய் சம்பளததில் நாணயப்பதிப்பு யந்திரசாலையில் இவர் ஒரு உத்தியோகம் பெறறார்; இவர் கணித சாஸ்திரத்துடன Chemistry (ரஸாயன சாஸ்திர)த்தில் பிரவீண்யத்தைக காண்பித்தமையால் இவ்வேலையை நன்கு முடித்த 3 வருஷங்களுக்கெல்லாம் மாதம் 1500 ரூபாய் சம்பளத்துககு உயர்ந்தார்.

(இன்னும் வரும்)

S. நாராயணன் B. A. L. T.

# சரீரசுகம்.

(321-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி ஆகாரத்தை நோக்குவோம்: நெல்லின் அரிசியால் பாகஞ் செய்து உண்பதுவே உசிதம். இதை எண்ணியே நம் ஔவையாரும் "நெறபயிர் விளை" என்றார். கோதுமை முதலான பதார்த்தங்களில் அதிக சத்து இருந்தாலும் அது ஜீரணஸ்தி கால தாமசத்தில் ஆகிறதனால் நோயுண்டாவதற்குக் காரணமாகிறது. நாம் உண்ணுகிற அன்னம் அவ்விதக் கெடுதியில்லாததன்றி இரத்த சுத்தியையுஞ் செய்கிறது. மேனாட்டு வைத்திய நிபுணர்களும் உணவுப் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து பரிசோதித்து உடம்புக்கு அரிஷியா லாக்கிய அன்னத்திலுள்ள நன்மை கோதுமை முதலான வஸ்துக்களில் இல்லையென்று கண்டு அநேக புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார்கள்.

வெகு காலமாக அவர்கள் கோதுமை முதலிய பதார்த்தங்களையே உண்டுகொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் நம் தேசம் போல் அத்தேசத்தில் மிகுந்த நெல் விளைவு இல்லாததே யாகும். அதன் பின்னர் மேனாட்டாராகிய அவர்கள் சிறிது காலமாக நாம் உண்ணும் அரிசி உணவையே உண்ணுகிறார்கள். இதன் உண்மை பத்திரிகை வாயிலாகக் கண்டோம். இவ்வருஷம் பர்மாவில் நெல் விலை யேற்றத்தை யடைந்தது. விளைவுக் குறைவினால் அன்று. மேனாட்டு ஏற்றுமதி அதிகமானதா லாகும். ஆகையால் நெல்லினாலாகிய உணவே தேக சௌக்கியத்திற்கு இன்றி யமையாதது. நாம் அதையே உண்ணும்போது அதைவிரித்துக்கூறவேண்டியது எதனாலெனில், அடிக்கடி கோதுமை முதலானவைகளா லான சிற்றுண்டிகளை உண்ணக்கூடாது என்பதற்கேயாகும்.

உண்ணும் முறை:—ஒரு முறை நெல்லை அவித்தலிலும், மறுபடி அன்னமாகும்போது அதன் சத்தாகிய நீரை வடித்தலிலும் ஆக இரண்டு முறை சத்துக் குறைவதால் புழுங்கலரிசியினும் பச்சரிசியின் அன்னமே சிலாக்கியம். இசையாவிடில் புழுங்கல் அரிசியாயினும் மிகவும் வேகுதல் செய்யாதும் வேகாமலுமின்றி நடுத்தரமாய்ப் பாகஞ்செய்து உண்ணவேண்டும்: அப்படி உண்பதில் கரு

னைக்கிழங்கு.மீங்கலாக மற்றக் கிழங்குகள் அடிக்கடி உபயோகித்துக் கொள்ளாமலும் இரவில் இலைக்கறிகள் இல்லாமலும் உண்ண வேண்டும். உணவிற்குப் புலாலைக் காட்டிலும் அதிக நன்மை பயக்கக்கூடியது அது. காய்கறி கிழங்கு வஸ்துக்களில் நற்சத்து இருக்கிறது என்று நம் முன்னோர்களும் தற்காலம் உணவிற்குப் புலாவில்லாத உணவு உட்கொள்ளுகிற தில்லையென்று நம்பியிருந்த ஆங்கிலேயர் முதலான மேனாட்டார் பலரும் புலாலைக் காட்டிலும் அரிசி முதலான மற்ற வஸ்துக்களில் அதிக சத்து இருக்கிறதென்றும் கண்டிருக்கிறார்கள். ஆகையால் உடம்புக்கு அதிக நன்மை யில்லாததும் பாவத்திற் குள்ளாக்குவதுமான புலாலை மறுத்தல் வேண்டும். தவிர பசுவின்பால் உபயோகித்துக் கொள்ளுதல் அவசியம். பசுவின் பாலின் நன்மையை அறியாதவர்களும் வைத்திய நூலில் வேண்டிய அளவு கற்காதவர்களுமான சில வைத்தியர்கள் பசுவின் பால் உபயோகிக்கின் வயோதிக காலத்தில் நீர் வியாதி முதலான சில நோய்களை உண்டாக்குமென்று சொல்லுகிறார்கள். அதை நம்பக் கூடாது. வைத்திய நூலார்

"பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் நோயாளி
சூலையர் மேகத்தோர் துர்ப்பலத்தோர்—ஏலுமிவர்
எல்லார்க்கு மேனி இளைத்தோர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாடு"

என்றதினாலும் ஆங்கிலேய வைத்தியர்களும் அவ்வாறு சொல்லுவதாலும், பசுவின்பாலைக் குழந்தை முதல் வயோதிகர் வரை உபயோகப்படுத்தல் நன்மை யென்றே கொள்ளவேண்டும்.

அப்பசுவின் பாலையும் இராத்திரி சாப்பாட்டில் மோருக்குப் பதிலாய் உபயோகித்தல் நல்லது. இல்லாவிடில் மோர் இல்லாது உண்டு கொஞ்ச நேரஞ்சென்று உட்கொள்ளவேண்டும். பழைய அன்னம் சுறுசுறுப் பின்மைக்குக் காரணமாதலாலும் பழைய கறிகள் நோய்க்குக்காரணமாதலாலும் அவற்றை அடிக்கடி உபயோகிப்பது கூடாது.

இவ்வாறு உண்பதிலும் நாம் எவ்வளவு உணவு உண்ண முடியுமோ அதற்குக் கொஞ்சம் குறைய உண்டால் ஜீரணஸ்தி சுகமா

யுண்டாவதன்றி சோம்பலும் இல்லாதிருக்கும். ஆகையால் ஜீரணஸ்தி இலகுவில் ஆகாதிருக்கும்படி ஒன்றிரண்டு தடவை உண்பதிலும் ஜீரணஸ்தி ஆகும்படி அநேக தடவைகளில் உண்பது நன்மையாகும். உண்டபின் நீரருந்துதலே சிலாக்கியம். அன்றியும் உண்டபின் நூறு அடிக்குக் குறையாது மெதுவாக உலாவுதல்வேண்டும்.

இதுவரை கூறியதன்றி இன்னும் கவனிக்கவேண்டியது யாதெனில், துயிலெழுதல் சூரிய உதயத்திற்கு முன் ஐந்து நாழிகை அல்லது மூன்று நாழிகை முன்னாக எழுதல் வேண்டும். ஸ்நானஞ் செய்தல் ஊற்று நீரிலேனும் ஆற்று நீரிலேனும் ஸ்நானஞ் செய்தலும், இசையாவிடில், கண்மாய் குளங்களிலுள்ள ஜலத்தை எடுத்துக் கொண்டு வந்து வெந்நீராக்கி ஸ்நானஞ் செய்தலும் வேண்டும். எந்த நீரையும் வெந்நீராக்கி ஸ்நானஞ் செய்தலும் கெடுதி செய்யாது. எப்பொழுதும் வெந்நீரை அதிக உஷ்ணத்துடன் உபயோகிக்கின் நல்ல இரத்தத்தைக் கெடுத்துவிடுமானதால் அதிக உஷ்ணமில்லாத வெந்நீரை உபயோகிக்கவேண்டும். ஸ்நானஞ் செய்தபின் எப்பொழுதும் அழுக்கில்லாத வஸ்திரத்தையே உடுத்தல் வேண்டும். பகலில் நித்திரை செய்யக் கூடாது. இரவில் $7\frac{1}{2}$ நாழிகைக்குப்பின் தூங்கி முன் சொன்னபடி நித்திரையைவிட்டெழுதல் வேண்டும். இதற்கு இசையாவிடின் மேற்சொன்னதற்குக் கொஞ்சநேரம் முன்பின்னாகச் செய்யலாம். அன்றியும் இரவில் பிரதிதினமும் 6 மணிக்குக் குறையாமல் அவசியம் நித்திரை செய்யவேண்டும். இல்லாவிடில் ஜீரணஸ்தியாகாமல் இரத்தங்கெட்டுவிடும். அன்றியும் புத்திநுட்பங் குறையும். ஆகையால் அதற்குக் குறையாது நித்திரை செய்யவேண்டும். மலஜலங்களைக் காலாகாலங்களில் உபாதியின்றியில் நீக்கவேண்டும். இல்லாவிடில் நோய்கட்கு ஏதுவாம்.

இதுவரை கூறியவைகளில் பெரும்பான்மை பொருந்தும் சிறுபான்மை மாறுபட்டிருக்கலாம். மாறுபடின், மேற்சொன்னவாறு சீர்திருத்திக்கொள்ளவேண்டும் இன்னும்ஒன்று அவசியம் கவனிக்கவேண்டும். பழக்கத்திலில்லாத ஆயுதம் முதலானவைகள் எப்படித் துருப்பிடித்துக் கெட்டுவிடுகிறதோ அதுபோல நம் உடம்பும் பயிற்சியில்லையேல் இரத்தவோட்டமும் இரத்த சுத்தியும் இல்லாது

கெடுதியடையும். தேகத்தை நாள்தோறும் பயிற்சித்தால் பிணியே அணுகாது. அன்றியும் இதற்குமுன் செய்யாதிருந்தவர்களுக்குக் கரும ரோகங்களன்றி ஏதாவது நோயிருந்தால் இதைச் செய்யின் நோய் விலகி மிகவும் அநுகூலமாகும். ஆகையால் அத்தேகப் பயிற்சியை இளமைப் பருவமுதற் செய்யின் நாளுக்குநாள் சரீரவன்மையும், சரீரக கெட்டியும் பசியும் உண்டாவதோடு, கபம், வாதம், சூலை முதலான நோயும் நீங்கும். அன்றியும் மனோதைரிய முண்டாகிறது. இதை,

"சிலம்பமுதல் மல்யுத்தந் தேசி நடைகொள்ளின்
பலம்பரவும் மெய்யிறுகும் பன்னத்—துலங்குபசி
உண்டாங் கபவாத மோடுவலி சூலையும்போம்
உண்டா மனர்திடமு மோர்"

என்று செப்புதற்கரிய அற்புதச் செயல்வாய்ந்த அகஸ்திய மகரிஷியினுடைய சிஷ்ய சிரேஷ்டரான தேரையர் சொல்லியிருக்கிறார்.

அன்றியும், அத்தேகப் பயிற்சி ஆங்கில கலாசாலைகளிலும் மற்ற இடங்களிலும் 'பாரில்' விளையாடுவதினாலும் பந்து முதலானவைகள் விளையாடுவதினாலும் ஜோடிக் கட்டை சுழற்றல் முதலானவைகளாலும் தேகப் பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள். அப்படிச் செய்வதில் சிலசமயம் அஜாக்கிரதையா யிருப்பின் கை கால் முதலான அவயவங்களுக்குக் கெடுதி நேரிடுகிறதென்று தற்காலம் அதை நிறுத்திவிட்டு தேகப பயிற்சிக்கு வேறு ஒன்றும் உதவியின்றிச் சரீரத்தையே பழகுதல் நல்லதென்று எண்ணியிருக்கிறார்கள்.

ஆகையால் நாள்தோறும் ஒருமணி நேரமாயினும் சரீரத்தில் வியர்வை உண்டாகும்படி 'தண்டம்' அல்லது இரண்டு மூன்று மைலுக்குக் குறையாத நடத்தல், அல்லது வீட்டு வேலைசளை செய்தல் முதலியன செய்யின் சரீரத்திலுள்ள கெட்ட இரத்தமானது வியர்வை மூலமாய் வெளிப்பட்டு விடுகிறது. பின்பு நல்ல இரத்தமானது சரீரம் முழுதும் பரவி தேகசௌகரியத்தைக் கொடுக்கிறது.

சிலர் பிள்ளைகளுக்குப் படிப்பு முதலானவைகளைப் படிக்கச் செய்யாது நேரத்தை வீண்போக்கலாமா வென்று நினைப்பார்கள்.

அப்படித் தேகப்பயிற்சியின்றிப் பிள்ளைகளைவிடுதல் உசிதமல்ல. ஏனெனில் பாடம் படிப்பதற்குச் சோம்பலறச் செய்வதும் புத்தியைச் சுறுசுறுப்புச் செய்வதும் தேகப்பயிற்சியே யானதால் நம பிள்ளைகளை இளமைப் பருவத்திலேயே அதைச்செய்துவிடக்காத் திரர்களாயிருக்கும்படி செய்யவேண்டியது அவசியம்.

அத் தேகப் பயிற்சி காலையிலும் மாலையிலும் செய்தல் நன்று. இல்லாவிடில் சாப்பாட்டுக்கு 2 மணி நேரஞ்சென்று செய்யவேண்டும். இல்லையேல் குடலுக்குக் கெடுதி நேரிடுகிறது. இப்பயிற்சி செய்யும்போது வாயைத் திறந்துகொண்டிருத்தல் கூடாது.

இதுவரை கூறியதில் சகல இன்பத்துக்கும் இச்சரீரமே வேண்டுமென்றும் அதற்கு நல்ல காற்றும் சுத்தஜலமும் நல்ல உணவும் தேகப் பயிற்சியும அவசியம் வேண்டுமென்றும் ஆகிறபடியால் எல்லோரும் சரீர சுகத்தையே கொள்ளவேண்டும்.

தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார்

## தமிழகச் செய்தி.

### பிரசங்கங்கள்.

பக்தி.

மதுரை மாணவர் செந்தமிழ்ச சங்கத்தின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமத். ம. கோபால்கிருஷ்ணையரவர்கள் விருப்பப்படி 16—2—12. மாலை 5-மணிக்கு மதுரை மேலக்கோபுர வாசல் அன்னக்குழிமண்டபத்தில் சபை கூடியது. மதுரைத் தமிழ்சசங்கம் அக்கிராசனாதிபதி ப்ரும்மஸ்ரீ, பி எஸ். சுப்பிரமணியஐயரவர்களும் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களும் தமிழபிமானிகளுமாகப் பலர் கூடினர். சபையார் விருப்பின்படி ப்ரும்மஸ்ரீ, பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்களே அக்கிராசனம் வகித்தார்கள். தூத்துக்குடி வித்துவானும் சைவப்பிரசாரகருமனுகிய ஸ்ரீமத். போ மு முத்தையபிள்ளையவர்கள் பக்தியென்னும் விஷயத்தைப்பிரசங்கிக்கத்தொடங்கி கடவுள் வாழ்த்து அவையடக்கம் கூறி, பக்தி அன்பு பற்று என்பன ஒருபொருட்சொற்கள் ஆன்மா குணியும் பக்தி குணமுமாம். பற்றுவான், பற்றப்படு பொருள், பற்றற்குக்காரணம், பற்றற்குத்துணை, பற்றலின்பயன் முனைஐவகைப் படுத்தல்வேண்டும்: பற்றுவான் ஆன்மா. பற்றப்படுபொருள் உலகம்

இறைவன் பற்றற்குக்காரணம், இன்பத்தையடையும் விருப்பமே. பற்றற்குத்துணை மனம், பற்றலின்பயன் இன்பம். இவற்றுள் பற்றப்படுபொருள் உலகமும் இறையும் என்றது ஆன்மாமனத்தால் முதலில் தாய் தந்தை குரு கல்வி மனைவி மக்கள் பொருள் முதலிய உலக விஷயப்பற்றையடைந்து அப்பற்றால வரும் சிறிய இன்பத்தையடைந்த பின்னர் இவ்வின்பம் நிலையிலதென்பதையும் நிலையான இன்பமொன்றுளதெனபதையும் அறிவாலறிந்து அதனையருள்பவன் இறைவனே என்று தெளிந்து இறைவன்பால் பக்தி செலுத்தல் சித்திக்கும் ஆதலாலென்க. உலகப்பற்றுக்களெல்லாம் ஒருபற்றிலிருந்து வேறுபலபற்றுக்களையுண்டாக்கலால் பிறவிக்கே யேதுவாகும். இறைவன பற்று ஏனைப்பற்றுக்களையெல்லாம் ஒழித்துப்பிறவா நெறியிலுய்த்துப் பேரின்பப்பெருவாழ்வைத்தருவது. இத்தகைய பற்று அருவமாகிகுணப்பொருளாதலின் அதன்செயலாகிய சரியை கிரியை யோக ஞானங்களாலே அதனை அறியவேண்டும். இது மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் எனமுறையே ஒன்றற்கொன்றுயர்வாக நால்வகைப்படும். இவை யொவ்வொன்றும் முறையே தலையிடைகடை என முத்திறப்படும். தலையன்பாவது ஒரு தலைவன் குணவிசேடங்களைக் கேட்டபொழுது தலைவியனமகிழ்ந்து பரவசப்படுதல்போல்வது இடையன்பாவது தலைவனைக்கண்டபோதுமனமுருகிப்பரவசப்படுதல் போல்வது கடையன்பாவது தலைவனுடன்கூடியபோது மனங்குழைந்து பரவசப்படுதல்போல்வது. ஆகவே முதலில் மந்ததர முதலிய நால்வகையாய் தலை யிடை கடை யெனமுறையே முத்திறப்பட்டுப் பன்னிரண்டு வகையாய் நிகழும் அன்பின் செயல் மெல்வினை வல்வினை யென இருவகைப்பட்டு வெளிப்படும். மெல்வினையாவது வேதாகம் விதிவழுவாது செய்யப்பெறும். வல்வினையாவது அன்பின் முதிர்ச்சியால் தற்போதமிழந்து வேதாகம விதி கடந்து வைராக்கியமெய்திச் செய்ப்பெறுவது. இங்ஙனம் செய்தவர்களே சிறுத்தொண்டர் கண்ணப்பர் முதலியவரென்க. இந்த அன்பென்னு மனநெகிழ்ச்சியான்று தன்பயன் கருதாது பிறர்பயனன்ட தலைமட்டும் கருதிச்செல்லுங்கால் அருள் எனப்பெயர் பெறும். அன்பின் முதிர்ச்சியே அருளாகும். இதனாற்றான், "அருளென்னு மன்பீன் குழவி" என்றார் தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார்.

நாம் இறைவனிடத்து அன்பு செலுத்துவோமாயின் பரம கருணா நிதியாகிய இறைவன் நமக்கு அருள் தருவன். அதனால் நித்யாநந்தப் பெருவாழ்வையடையலாம்'' என்று நன்றாக விரித்து உபந்யசித்தார்கள்.

பின்னர் சபாநாயகரவர்களெழுந்து "உபந்யாசகர் கூறிய விஷயங்களின் அரும்பொருள்களை நன்கு விளக்கி இவ்வுபந்யாசம் கடவுளிலக்கணம் ஆன்ம இலக்கணம் சாதன இலக்கணம் முயற்சியிலக்கணம் பயனிலக்கணம் என ஐந்து அங்கங்களையுடையது. பிரசங்கியார் கூறிய அனைத்தும் சாஸ்திரசம்மதமானவை யாதலுடன் சாஸ்திரங்களில் அமைந்துள்ள அரிய பெரிய விஷயங்களெல்லாம் மிகவும் தெளிவாக அறியத்தக்க நிலையில் அமைந்துளது'' என்று நன்றாக விளக்கியதுடன் உபந்யாசகராகிய பிள்ளையவர்கள் கல்வித்திறமையையும் பேசுந்திறமையையும் பக்தியையும் பாராட்டிப்பேசினார்கள். பின்னர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்களெழுந்து பிரசங்கியாருக்கும் சபா நாயகருக்கும் வந்தனங்கூறிப்பூமாலை சூட்டிச்சபையாருக்கும் வந்தனம் கூறினார்கள்.

## திருக்குறள் மாட்சி

மாலை 5-மணிக்கு மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் சபைகூடியது. பெரிய உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் வர்த்தகர்களும் வித்துவான்களும் மாணாக்கர்களும் சுமார் 300 பேர் கூடினர். சபையார் விருப்பப்படி ஸ்ரீமத். பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள் அக்கிராசனம் வகித்துக் கடவுள் வாழ்த்துக்கூறியவுடன் உபந்யாசகராகிய ஸ்ரீமத். பொ. மு. முத்தையபிள்ளையவர்களைப்பற்றிச் சபையாருக்குக் கூறினார்கள். அதில் ஒரு கிரந்தசுலோகங்கூறி அதன் பொருள்விரித்தார்கள். அதன் கருத்து-*கொடையானது கொடுப்போர் பெறுவோர் இருவரும் மகிழும்படியும், போரெதிர்த்தவரிருவரும்மகிழும்படியும் பிரசங்கம் பிரசங்கிப்பவர் கேட்பவர் இருவரும் மகிழும்படியும் இருக்க வேண்டு மென்பதே. இத்தகைய பிரசங்கம் ஸ்ரீமத். பொ. மு. முத்தையபிள்ளையவர்களுடையது என்று விரித்துக் கூறினார்கள்.

---

*ஈவாருங் கொள்வாரு மேற்று நிருவோரு
மோவாது கேட்பா ருவைப்பார்—நாவார
நன்றென்ன லாறு வலமாகு மீகைபோர்
மன்றிற் புகலும் வகை.

உபந்யாசகர் எழுந்து "வள்ளுவர் என்பது காரணப் பெயர். இத்திருக்குறள் தோன்றுவதற்கு முன்னர் குறட்பாவால் நூலில்லை. சிற்றுருப்பாக்களிற் பெரும்பொருளடங்கவைத்தல் அருளாட்சியுடையார்க்கே கூடும்." இந்நூல் புருஷார்த்தங்கள் நான்கையும் பயப்பது. துறவாகிய காரணவகையான் வீடுபேறுங்கூறப்பட்டிருக்கிறது. முப்பாலெனப்பெயர் கூறப்படினும் நான்கனையும் கூறியிருப்பதாகவே சிறப்புப் பாயிரக்காரர் கூறியுள்ளார்கள். முதலில் 4 அதிகாரம் பாயிரம். இதை 'அநுபந்தசதுட்டய' மென்பர் வடநூலார். அதிகாரி, விஷயம், சம்பந்தம், பயன் ஆகிய இந்நான்கும் நூலாசிரியரே சொல்லவந்தக்கன. கடவுள்வாழ்த்து, வாழ்த்து வணக்கம், பொருளியைபுரைத்தல் என மூத்திறப்படும். முதற்குறள் பொருளியைபுரைத்தல் ஆகிய கடவுள வாழ்த்தாம். மற்ற 9 குறளும் பயனுரைத்தலாம். வான்சிறப்பு சம்பந்தமாம். நீத்தார் பெருமை அதிகாரியியலாம். அறன்வலியுறுத்தல் நுதலியபொருளாம். இல்லறவியல 20 அதிகாரமும் இந்திரியநிக்கிரகத்தின்பொருட்டு அடுத்துவைக்கப்பட்டனவாம. இவை அகப்பற்று நீக்கத்தின் பொருட்டே யமைந்தன. துறவறத்தை விரதம் ஞானம் என இருவகைப்படுத்தார். சரீரப்பற்று நீக்கவே விரதத்தை முதலில் 9 அதிகாரங்களால் விளக்கினர். இது ஆராய்ச்சி நிலையாம். அடுத்த அநுபவத்தையுணரவே ஞானவியலை 4 அதிகாரங்களால்விளக்கினர். வாசனாக்ஷயம், தத்துவஞானம், மனோநாசம் என்னும் மூன்றுமே ஞானவியலாம். மெய்யுணர்தல் தத்துவஞானமாம். நிலையாமை, துறவு இரண்டும் மனோநாசத்தைக்குறிப்பன. அதுவிதுவென்றுஞ் சங்கற்பநாசமே மனோநாசமாம. அவாவறுத்தல் வாசனாக்ஷயமாம். ஞானிகளும் மாறமுடியாத நிலையிலிருந்து பொருளாதியவற்றைக் கொடுத்தலால் இதன்பின் ஊழ் கூறப்பட்டது. பொருட்பால் யாவருக்கும் உரிமை யிருப்பினும் தலைமைபற்றி அரசின்பால் வைத்துக் கூறினர். காமத்துப்பால் சிற்றின்பமபோலத் தோன்றினும் பேரின்பததைத் விளக்குவதாகும். திருக்கோவையார் இவ்விஷயத்தை நன்கு விளக்கும். களவியல் பரமுத்தியும், கற்பியல் ஜீவன் முத்தியுமாம்." என்று ஒவ்வொன்றையும் வேண்டிய அளவு விரித்துக்கூறி சபையை மகிழ்வித்தார்கள். சபையார் யாவரும்மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள்.

சபாநாயகரவர்கள் உபந்யாசத்தின் றன்மையையும் உபந்யாசகர் திறமையையும் மிகப் பாராட்டி மெச்சிப் பேசினார்கள. பின்பு ஸ்ரீமத். ம கோபாலகிருஷ்ணையரவர்கள் எழுந்து,

"திருந்துறளாராய்ச்சி"னிசெய்திங்குள்ளோர்மனக்குஞ்செவிக்குமின்பம்
பெருகவு"திருவநட்புலவ"னெனத்தகு முந்தையப்பெயர்கொள்பெரியோனும்
செருக்குறவிச்சபைத்தலைமைவகித்ததுரை சுப்பிரமணியத்திருநாமத்தியாம்
மருக்கமழும புயதொடையேய் மறையவனும் மற்றவரும் வாழிமாதோ.

என்று மங்கலவாழ்த்துக் கூற இரவு 8-மணிக்குச் சபை கலைந்தது.

பத்திராதிபர்.

## ஆனரபில்-ஸ்ரீமத். வே. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்

## (B.A., B.L., F.M.U.C.S.I)

### காலஞ்சென்றமைக்காற்ருது பாடியவை.

பொன்னியெனும் புனிதநதி புடைதோறும்பாய் புனலூட்டிப் பொலிவுற்
பன்னரிய சிவதலத்தும் அரிதலத்தும் சிறந்தபழம் பதியாயுள்ள [ஸ்ரீரங்கம்
மின்னுபுகழ் அரிவிழிமங் கலம்இயற்றும் அரியதவ விளைவே! யாண்டும்
துன்னுகலை அருள்அறிவு நண்புபொறை ஆதியன துலங்குந் தூயோய்! (1)

போற்றிடுவள் ளுவர் "தோன்றிற் புகழொடுதோன் றுக" வென்னப் புகன்ற
பாற்கடலிற் பனிமதியும் பாஞ்சஜன்ய சங்கமதிற் பண்பார் முத்தும் [வாறே
தோற்றுவபோல் தொல்புகழ்சேர் தூமறைவேங் கடராமனவர் தோன்றலாகி
நாற்றிசையும் எத்திசைகொள் வே.கிருஷ்ண சாமி யெனும் நாமத் தோனே!

வேறு.

சீராரு பேத மதமுங்க டந்த ஸ்ரீராம கிருஷ்ண மிஷனைப்
பாராரு மாந்தர் பற்றற்று நின்று பவமற்று நாளு முயல்வே
நேரான சென்னை எனுநல்ல ஊரி னிதிதந்து நிறுவு புகழோய்!
காராரு மேனி ஒருதேவ நாம! கறையற்ற பூர்ண மதியே! (3)

வேறு.

மன்றுதிகழ் மதுரைநகர் மாலைவர்கோ தேந்து தமிழ்ச்சங்க மாண்பால் என்றும்
நன்றுதிகழ் உயர்நச்சி னார்க்கினியர் ஞாபகச்சின் னத்தைக்கொண் டாட்டத்
தன்றருகுழுஉ மியசபையின் அக்ராஸ னாதிபதி ஆயினை! பின்னை
யென்றினியாம் காண்பதுரை வே கிருஷ்ண சாமியெனு மிசைமிக்கோனே!

நெல்லைமிற்கூ டியசென்னை மாகாணச் சபைத்தலைமை நீயே பூண்டாய்!
கல்விநலம் வளர்சென்னைச் சர்வகலா சாலையர்க் காவலா நின்றாய்!
பலகலைதேர் அதன்பிரதி நிதியாகச் சட்டநிரு பணசங் கத்தில்
எல்லவரும் புகழ்ந்தேத்த இருந்தனைநீ எங்குற்றாய்? இயம்பு வாயே. (5)

நம்பெரியோர் நாட்டியபல் நல்லறமும் நாளும்நனி நடக்கு மாறும்
எம்பெருமான் ஆலயம டாலயங்கள் யாவுமினி திலங்கு மாறும்
பம்பியசீர் உயர் "தர்ம ரக்ஷணஸ பா" வெனுமபேர் படைத்த தாய
அம்புவிக்கோர் அவசியமாம அறக்காவற் கழகமதை அமைத்திட் டாயால்.()

'நம்மெய்வருந்திக்கைசெய்துய்ம்மின்'எனநம்முதியோர்நவன்ற தெண்ணிச்
செம்மைபெறு சுதேசநிதி கைத்தொழிற்சங்கம் நிறுவிச செழிக்கச்செய்தாய்!
கைம்முதலை 'அர்ப்பதினெட் கம்பெனி'நேர் 'கம்பெனி'யிற கவிழ்த்து திரங்கி
நம்மவர் அழாதவணம் "இந்தியன்பாங்க்" எனும்நிதியை நாட்டி னையால் (7)

உடன்றேயால் வருந்துபவர் அங்கோயா வுகநீர்ந்திக் குய்யுமாறு
கடமார் "வேங் கடரமண வைத்தியசாலையைநிறுவித் தழைக்கச்செய்தாய்,
மடன்றேயால் வருந்துபவர் அங்கோயா வுநீர்க்து வயங்கு மாறு
திடமாஒர் வடமொழிக்க லாசாலை தனைநிறுவிச செழிக்கச் செய்தாய். (8)
கோதில் 'இவன் தந்தையென்னோற் றானகொல்!" எனக் குவ்லயத்தோர்கூற
வேதியர் சிகாமணியே! வே கிருஷ்ண சாமியெனும் மேதக் கோனே! [வாத
ஓதுபுகழ் "ராணிவெடெபுத் தசுசாலை" தனைநிறுவி ஓங்கச் செய்தோய்!
காதலுறும் எமைநீக்கிக் கடிதகன்ற காரணம்நீ கழறு வாயே. (9)

வேறு.

கைக்குவரும் பொருள்ஒன்றே கருதித் தீய
கருமமுஞ்செய் தீத்துணையு ராகித் தாமே
தய்க்குமனப் புன்மையர்கள் தோறும் நாணித்
தூநெறியிற் செலயாரும துன்பம நீங்க
மெய்க்கணியாய்ப் பொய்ப்பகையாயப் புகழின் வாழ்வாய்
மேதகுஹைகோர்ட்வக்கீல் வேலை பார்த்தாய்!
தக்கநெறி மிக்கநிதி ஈட்டி நின்போல்
தந்துவக்கும் தன்மையுளார் தாமிங் குண்டோ? (10)

திருநலமும் உருநலமும் திகழும் நின்றன்
திறமையையும் பெருமையையும் தெரிந்தே யன்றோ
கருணைமலி நமதுதுரைத் தனத்தார் நிற்குக்
கனமிகுஹைகோர்ட்ஜட்ஜூத் தானம் நல்கி
அருளீமிகு கவர்னர்உறுப் கவுன்ஸில் மெம்பர்
ஆகசினை ஆக்கியதும்; அவற்றை மிக்க
பொருள்வருவா யையுமவெறுத்தேற் றதும்நீ நன்மை
புரவலர்க்கும் பொதுஜனர்க்கும் புரிதற் கன்றோ?

வேறு.

நிலவுலகம் பலநெடுகோள் காத்தளித்த விக்டோரியா நேச மைந்தன்
'ஆலகசமா தான'னென ஒருதிருநா மம்பெறுதற் குரிமை பூண்டே
இலகியசல் ஏழாம்எட் வர்ட்என்னும் இறையவனும் எழில்மிக் கார்ந்த
குலவுபுகழ் அலெக்ஸாண்ட்ராக் கோமகளும் முன்னாளிற் குறித்துச் செய்த,
அருந்தவத்தின் பெரும்பயனா அவதரித்த ஐந்தாம்ஜார்ஜ் அரசர் கோவும்
பெருகுகருணைத்தடங்கடலாப்பிறங்குமவர்மனைவியெனும் பெருமைவாய்ந்த
இருங்குணஞ்சேர் மேரிஎனும் எழில் மாதும் நமதிறைவன் இறைவியாகப்
பொருந்துபுகழ் டில்லியினில் எழுந்தருளிப் பொன்மகுடம் புனைந்த காலை,

அரசனரசியர்காண அந்நகர்க் குப்பயணம் ஆன நின்னை
விரகபிணி இடைதவிக்க யாம்அடைந்த விசனமும்,நின் மேன்மை நோக்கிப்
பரசுபுகழ் சமதிலறு "ஸி. எஸ்.ஐ." எனப் பகருமுயர் பட்டம் ஈந்த
வரிசையினால் யாம் அடைந்த மகிழ்வையும்நீ அறிகுவையோ மதிமிக்கோனே!

ஒண்மையினால் நோற்றதிரு உண்மையினால் தக்கோர்க்கே உதவும்மேலாம்
வண்மையினால் பிரசங்க வன்மையினால் எங்குஞ்செல் வாக்கால் வாய்மைத்
திண்மையினால் தூயமனத் தண்மையினால் செய்கடன்செய் திறத்தால்ஞான
நுண்மையினால் தன்னிகரில் ஒண்மணியே! எவணொளித்தாய்? நாவலூராயே.

இதுகாறும் செயற்கரிய பலசெய்தாய்! விக்டோரியா எட்வர்ட் ஹால்நற்
றுதியாரும மதுரையினில் தோன்றிடுவான் ஆயிரத்துத் தொளாயிரத்துப்
பதினோராம் வருடத்திற் பதினோராம் மாதத்திற் பதினோராம்நாள்
அதிமகிழ்வோ டதன் அஸ்தி வாரக்கல் நாட்டியநீ அகன்றதென்னோ? (16)

வேறு.

காணாத பரம்பொருளைக் காண்டற் கேயோ?
காதன்மிகு பெற்றோரைக் காண்டற் கேயோ?
நாணாளும் நின்மனத்தின் நீங்காச் சாமி
நாதனைக்காண் டற்கேயோ? நாண மாதி
பூணைப் பூண்கற்பின் மிக்கா ளான
பொன்னனைய நின்மனையைக் காண்டற் கேயோ?
வாணாளைப் பொதுநலத்தில் முற்றும் போக்கி
வான்புகழை நிலைநிறுத்தி வானுற் றுயநீ? (17)

வேறு.

பாராளு வோரு மூராரு நன்கு பகர்நீதி யாள! நலமே
தாராவி ரோதி திருதோன்று குன்ய சனுர்மாத நீர்மை தரவே
ஆராரு நின்னை அறிவேதுமற்ற அவ்வாண்டு மாத மவைசேர்
ஈராறுமொன்று மியைநாள்வி யாழ னிவணெம்மி னீக்கி யனவே. (18)

வேறு

என்னையே! நின்போல் இன்குணம் நிறைந்த இதயமுள் ளவரினி எவரே?
மனனுநல் லறிவும புனிதமும் நிறைந்த மதிவலி படைத்தவர் எவரே?
பின்னுமோர் உலகம உளதெனி லதன்மேற் பேரின்ப நிலையமே பெற்றாய்
அன்னதொன் றிலையேல், இப்புவிவாழ்பே றனைத்தையும் பெற்றவன நீயே.

வேறு.

ஆனரபிள் டாக்டர் ஸர் எஸ் சுப்பிரமணியய்யர் கே. ஸி. ஐ. ஈ. என்னும்
மானவன்பால் தொழில்பயில்வுறை கோட்டுவக்கீ லாகிஅவன் வகித்த பற்பல்
தானமுமத் தவற்றின்மேற் றனமுமுத் தவன்போன்றா சாரபுகழ் கொண்டு
ஈனமில்பன் னலமியற்றி இலங்குநின் சீர்த்திகலம் என்றும் வாழி. (20)

ம. கோபாலகிருஷ்ணையர்.

உ

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்
விற்பனைக்குத் தயாராயிருக்கும்

# அருமையான தமிழ்ப் புஸ்தகங்கள்

| | |
|---|---|
| தனிச்செய்யுட் சிந்தாமணி 182 வித்துவான்கள் பாடிய 3815பாடல்கள் | ரூ 3— 0—0 |
| சிவஞானபாஷ்யம | 1— 4—0 |
| பழமொம்பழக்கவிச்சிங்க நாவலர் பிரபந்தத்திரட்டு | 2— 8—0 |
| கம்பராமாயணம் ஆரண்யகாண்டம் மூலமும் உரையும் | 3— 8—0 |
| திருக்குற்றாலத்தலபுராணம் செய்யுள் (அரும்பதவுரையுடன்) | 1— 8—0 |
| திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு (அரும்பதவுரையுடன்) | 1— 8—0 |
| திருக்குறள் பரிமேழகருரையுடன (பாக்கட் சயிஸ்) | 1— 0—0 |
| திருவாப்பனூர்ப்புராணம் | 1— 0—0 |
| அரிமழத்தலபுராணம் | 1— 4—0 |
| திருக்குற்றாலத்தலபுராணம் (வசனம்) | 0—12—0 |
| குலோத்துங்கசோழன் கோவை (அரும்பதவுரையுடன்) | 0—12—0 |
| குமணசரித்திரம் ௸ | 0— 8—0 |
| ஸ்ரீவான்மீகி இராமாயண சருக்கார்த்த சங்கிரகம் | 0— 8—0 |
| மாண்டவன் மீண்டமாயம் (ஓர் துப்பறியும் தமிழ்நாவல்) | 0— 8—0 |
| கன்னியாகுமரித்தலபுராணம் வசனமும், செய்யுளும் | 1— 0—0 |
| சித்தாந்தஞானரத்நாவளி | 0— 6—0 |
| சர்வஞானோத்தரம் | 0— 1—0 |
| லாலா லஜபதிராய் சரித்திரம் (படத்துடன்) | 0— 2—0 |
| திருவருமாமலைச்சிலேடைவெண்பா | 0— 2—0 |
| மூவகையான்மாக்களினிலக்கணம் | 0— 1—0 |
| பரப்பிரம்மவிளக்கம் | 0— 1—0 |
| கைக்குவார் மஹாராஜா அவர்கள் மஹோபந்யாசம் தமிழ்மொழி பெயர்ப்பு படத்துடன் | 0— 2—0 |
| மாலைமாற்றுமாலை மூலமுமஉரையும் | 0— 8—0 |
| சந்நியாசிகீதமும் பராதஜாதிய கீதமும் | 0— 2—0 |
| சேதுபர்வதவர்த்தனியம்மைபிள்ளைத்தமிழ் | 0— 4—0 |
| அத்துவிதவாக்கியத்தெளிவுரை | 0— 4—0 |
| திருச்செந்தூர்கலம்பகம் | 0— 3—0 |
| அட்டாங்கயோகக்குறள் | 0— 2—0 |
| பாரதம் (தமிழ்ச்சங்கம் பதிப்பு) | 3— 0—0 |
| வைத்தியசார சங்கிரகம் ,, | 3— 0—0 |
| பன்னூற்றிரட்டு ,, | 2— 0—0 |
| சைவமஞ்சரி ,, | 1— 8—0 |
| ஞானமிர்தம ,, | 1— 0—0 |
| தமிழ்சசொல்லகராதி ,, (உயிரெழுத்துமுடிய உதாரணங்களுடன்) | 6— 0—0 |

[இவைகளுக்குத் தபால்சார்ஜ் வேறு.]

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,
புரோப்ரைட்டர் அண் பத்திராதிபர்,

## வித்தியாபாநு.

இம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை சௌமிய௵ சித்திரைமீ முதல் "மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை"யிலிருந்து வெளியாகி வருகிறது. ஒவ்வொரு விஷயமும் இலக்கணப்பிழையின்றி தெளிவானநடையில் எழுதப்படுகிறது. பாஷாஞானமும், பகவத்பக்தியும், நல்லொழுக்கமும், தெளிந்த புத்தியும் உண்டாக்கத்தக்கனவாக தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல பண்டிதர்கள் பலர் விஷயதானஞ்செய்து வருகிறார்கள்.

சந்தா விவரம்:—வருஷம் 1-க்கு (தபாற்கூலியுள்பட) ரூபாய் 2, மாணவர்கட்கு மட்டும் ரூபா 1, (தபாற்கூலி வேறு) தனிப்பிரதி 3 அணா.

## அச்சுவேலைகள்.

தமிழிலும், இங்கிலீஷிலும், பலவித மைகளாலும், கிலீட்டுகளாலும், திருமணப்பத்திரிகைகள், பட்டா, முச்சலிக்கா, ரசீது, உண்டியல், வக்காலத்து முதலிய கோர்ட்டு சம்பந்தமான சகல வேலைகளும், கணக்குப் புத்தகங்கள், வட்டிச்சிட்டைப் பாரங்கள், வெட்டர்ப் பாரங்கள், பழையநூல்கள், தற்காலவித்துவான்கள் பாடும் புதிய நூல்கள், கியாலண்டர்கள், இலக்கணப் பிழைகளில்லாமல் திருத்தமாயும் பார்டர்களாலும் படங்களாலும் ஒவ்வொருவர் மனத்தையும் கிரகிக்கும்படி அலங்கரித்துச் சீக்கிரமாகவும் சார்ஜு சகாயமாகவும் செய்துகொடுக்கலாகும்.

## பயிண்டுவேலைகள்.

கட்டிங்மிஷின், ரூலிங்மிஷின், நம்பரிங்மிஷின, கம்பித்தையல்மிஷின், பெர்ப்ரேஷன்மிஷின், டைமிஷின் முதலிய இயந்திரங்கள் எங்களிடமிருப்பதால் கிலிட்டு முதலிய அலங்காரத்துடன் எவ்வித உயர்ந்த பயிண்டுகளும் குறைந்த சார்சுக்கு சீக்கிரம் தயார்செய்து கொடுக்கலாகும்.

## ரப்பர் முகர்கள்.

ரப்பர் முகர்கள் அவரவர் விரும்புகிற மாதிரியில் நீடித்தகாலம் கெடாமலிருக்கும்படி சார்சு சகாயமாயும் நேர்த்தியாயும் சீக்கிரம் செய்துகொடுக்கலாகும்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
புரோப்ரைட்டர் அன் பத்திராதிபர்,
விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

# சமாசாரக்கொத்து.

இந்தியா முழுவதிலும் நடக்கும் பத்திரிகைகளிலெல்லாம் மிகப் பழையது "பெங்கால் கெஜட்" என்னும் பத்திரிகை. அது 1816௵ ஆரம்பமானதாகும்.

அப்துல் ஹமீது என்ற துருக்கி சுல்தானுக்கு அரண்மனையில் நாலாயிரத்துக்குக் குறையாத பெண்சாதிகள் இருந்தார்களென்று இங்கிலாந்தில் வெளியாகும் கரஸ்பாண்டன்ட் என்ற பத்திரிகையில் ஒருவர் துருக்கிப் பிரதேசத்தைப்பற்றிய ஒரு வியாசத்தில் எழுதியிருக்கிறார்.

கூச்பிஹார் ராஜகுமாரத்தியான ப்ரிதிவாவுக்கும் மிஸ்டர் மான்டர்ஸனுக்கும் சென்றமீ 21உ மாலையில் பிரம்மசமாஜசடங்குகளின்படி விவாகம் நடந்தேறியது. விவாகமகோற்சவத்திற்குப் பெரிய மகாராணியும் இன்னும் சில பந்து ஜனங்களும் வந்திருந்தனர். மணமகனும் மணமகளும் இந்தியர்களின் உடைகளைத் தரித்திருந்தார்கள்.

பிள்ளைகரைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அம்பாள் ஸ்திரீயை வடமலையாளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கிருஷ்ணன்நாயர் விசாரணை செய்து வந்தபோது அவளைக்கட்டாயப்படுத்தி அவளிடமிருந்து 100 ரூபாய் பறித்துக்கொண்ட குற்றம் ருசுவானபடியால் அவனுக்கு ஒரு வருஷக் கடுங்காவலும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம்கொடாவிட்டால் இன்னும் ஆறு மாதம் கடுங்காவலில இருக்கவேண்டுமாம்.

பாரிஸ் நகரத்தில் 37 வயதுடைய பெர்கா என்பவன் சில குற்றத்திற்காகச் சிறையிலிடப்பட்டான். அவனை நல்வழிப படுத்தக் கருதி 54 வயதுடைய கிராட் என்னும் விதவை அவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாள். கல்யாணசமயத்தில் மாத்திரம் அவன் விலங்கு நீக்கப்பட்டிருந்தது. மோதிரம் மாற்றினவுடனே அவன் அவளைப்பிரிய இஷ்டப்படாதவனாய்க் கட்டித் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டானாம். போலீஸார் மீண்டும் விலங்கைப்பூட்டி அவனை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். வழக்கு விசாரிக்கப் படுகிறதாம்.

பத்திராதிபர்.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனுமாக அனுப்பப்படும். |

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணு முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணு 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் | அகலம் | 1-க்கு | ரூ. | முழம் | அகலம் | 1-க்கு | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2½ | 6முதல் | 8 | 7 | 3 | 10 முதல் | 13 |
| 5 | 3 | 7 | 9 | 8 | 3 | 12 | 15 |
| 6 | 2 | 8 | 9½ | 9 | 3 | 14 | 16 |
| 6 | 3 | 9 | 13 | 10 | 3 | 15 | 18 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், கைஸாம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம், சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. ஒரு ப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | |
|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 0 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 8 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | .. | ... | 0 6 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும நேர்த்தியும் நைசும பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City.